MARTHANDAM INTEGRATED DEVELOPMENT SOCIETY
MIDS
LIFE TO THE FULL

சுடர் 14 கதிர் 4

# மிட்ஸ்

# ஐக்கிய சுடர்

அக்டோபர் - டிசம்பர் 2023

மும்மாத இதழ்

தனிச்சுற்றுக்கு மட்டும்



ஆதரவாளர்கள்
**மேதகு ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ்**
தலைவர் - மிட்ஸ்

**அருட்தந்தை. முனைவர் ஜெறோம் C.**
இயக்குநர் - மிட்ஸ்

ஆசிரியர்
**திரு. M.G. ஜோசப் பேட்ரிக் ஆன்றனி,**
M.S.W., LL.B.,

ஆசிரியர் குழு
**திருமதி. புஷ்ப லதா .A.L**
**திருமதி. வினிதா .S**
**திருமதி. சசிகலா .T**
**திருமதி. கிருஷ்ணகுமாரி (அல்போன்சா) .C**
**திருமதி. சஜிதா .S**

தொகுப்பாளர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்
**திருமதி. V. சுனி**

வெளியீடு
**மிட்ஸ்,**
இடைவிளாகம் - கழுவன்திட்டை
குழித்துறை - 629 163, குமரி மாவட்டம்.

Ph : 04651-263390, 295690
Email : mids.marthandam@gmail.com
Website : mids.org.in

அச்சிட்டவர்
**நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,**
நாகர்கோவில்

*************************

**தனிச்சுற்றுக்கு மட்டும்**

*************************

# உள்ளே ...

1. ஆயரிடமிருந்து ........................................ 4
2. இயக்குநரிடமிருந்து ................................. 5
3. கிறிஸ்துமஸ் : காரிருளிலிருந்து ஒளியை நோக்கி .................................................. 6
4. உலக தபால் தினம் ................................ 8
5. படித்ததில் பிடித்தது ................................ 9
6. பாலியல் வன்கொடுமை ......................... 10
7. தெரிந்து கொள்வோம் ........................... 13
8. மெல்ல மெல்ல முன்னேற்றத்தின் பாதையில் திருமதி. சிவசெல்வகுமாரி ..... 14
9. சமூக சீர்கேடுகளின் ஓர் அலசல் .......... 16
10. பிற நிகழ்வுகள் ..................................... 17
11. வாழைப்பழ கேக் .................................. 17
12. விடுகதைகள் ........................................ 18
13. கோல்பிங் தின விழா ........................... 18
14. மிட்ஸ் குடும்ப வளர்ச்சித் திட்டம் .......... 19
15. மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வு .................. 19
16. மிட்ஸ் செயல் திட்டங்களின் ஓர் பார்வை ....... 20
17. மிட்ஸ் ஆஸ்தி - 2023 ........................ 21
18. குறுக்கெழுத்துப் போட்டி ........................ 23
19. குமரி மாவட்த்தில் கண்களுக்கு தெரிந்து தெரியாமல் இருக்கும் கசக்கும் உண்மைகள் ......................................... 25
20. கவிதைகள் .......................................... 25
21. அடோல்ஃப் கோல்பிங் ........................... 26
22. விண்ணைத் தொடு திட்டம் .................. 27
23. மிட்ஸ் விருட்சம் என்ற நுண்கடன் ......... 27
24. தளிர்கள் உலக திட்டம் ........................ 28
25. மரியன் இயக்கத் திட்டம் ...................... 29
26. MMWS ............................................... 29
27. கைம்மாறு கருதாத உதவி ..................... 30
28. அறிந்து கொள்வோம் ............................ 30

# ஆயரிடமிருந்து....



அன்பையும் அமைதியையும் ஏங்கி தேடும் உலகிற்கு சாட்சிகளாக நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்றைய உலகின் இன்ப துன்ப நிகழ்வுகள் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டு கொண்டிருக்கின்றன. தொழில்நுட்ப புரட்சியும், பேரிடர்களும், செயற்கை நுண்ணறிவு கலாச்சாரமும் வரவிருக்கும் உலகை எப்படி வடிவமைக்கும் என்பது சிந்திக்கும் மனிதர்களில் சிந்தனை குழப்பத்தை உருவாக்குகிறது. மதமும் மதச்சார்பின்மையும் இன்றைய மனிதனால் இணைத்து பார்க்க இயல்கிறதா? அமைதி, மனித மனங்களில் அனுபவமாகாத ஒன்றாக இருக்கின்றது. குடும்ப வன்முறைகளும், இன்ப உலகில் சுற்றுலா வரும் இளைஞர்களும், புறம் தள்ளப்பட்ட முதியவர்களும், இளம் குடும்பங்களை கடந்து தாக்கும் பெற்றோர்களும், நாட்டை கட்டியெழுப்புவதை விட அரசியல் களத்தை விளையாட்டு மேடையாக மாற்றுபவர்களும் எத்தகைய எதிர்காலத்தை தரப்போகிறார்கள். அன்பும் அமைதியுமின்றி இவ்வுலகில் இணைந்து பயணிக்க முடியுமா? இவ்வாறு ஆயிரமாயிரம் கேள்விகள் மனிதனை தாக்கி கொண்டிருக்கின்றன. உலகை அறிந்த இளைஞன் உலகம் சுற்றும் வாலிபனாக மாறத் துடிக்கிறான். வாழ்க்கையில் ஆட்டமும் பாட்டமும் போட்டு ஆடி முடிக்க விரும்புகிறான். உலகை அறிந்த இன்றைய இளைஞன் எத்தகைய எதிர்காலத்தை கட்டியெழுப்ப போகிறான். வளர் இளம் பருவத்தினர் வாழ்வின் பொருளை புரிந்துள்ளார்களா? பள்ளியில் பாடம் முதலில் கற்பிக்கப்படுகிறது. பின்னர் தேர்வு வரும். ஆனால் வாழ்க்கையில் தேர்வு முதலில் வரும் பின்னரே பாடம் வரும். எனவே இன்றைய தொழில்நுட்ப வசதிகளும் வாய்ப்புகளும் பயன்படுத்தி மனிதன் தன் வாழ்வின் பொருளை உணர்ந்து அர்த்தமுள்ள வகையில் வாழ தன்னை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். வாழ்க்கை குத்தாட்டம் போட்டு முடிக்க வேண்டியதல்ல, நன்மை செய்து வாழ்ந்து வளமாக்க வேண்டியது.

இன்றைய உலகம் அன்புக்காக அமைதிக்காக ஏங்கி தவிக்கிறது. இந்த அன்பையும் அமைதியையும் யார் தான் தர முடியும்! அன்பே உருவான கடவுள் தம் அன்பை ஒரே மகன் வாயிலாக உலகிற்கு வெளிப்படுத்தினார். அந்த மகனின் உதயம் அன்பையும் அமைதியையும் பறைசாற்றியது. அன்பு கடவுளிடமிருந்தே வருகிறது. அன்பு செய்பவர்கள் கடவுளிடமிருந்தே பிறந்தவர்கள், கடவுளை அறிந்தவர்கள். அன்பு செய்யாதவர்கள் கடவுளை அறிவதில்லை. ஏனெனில் கடவுள் அன்பாய் இருக்கிறார் (1யோவா 4:7-8). வன்முறையும் வெறுப்பும், தன்னலமும், போர்களும், சதித் திட்டங்களும், வஞ்சக உள்ளங்களும் தலைவிரித்தாடும் இத்தருணத்தில் கடவுளை இழந்த மனிதனுக்கு கடவுளின் அன்பை வழங்கவும், மனிதனை இழந்த கடவுளோடு அவனை ஒப்புரவாக்கவும் இயேசு கிறிஸ்து இவ்வுலகில் தோன்றினார். அவரது திருபிறப்பு அன்பின் பிறப்பு; அமைதியின் தொடக்கம். கடந்து வரும் திருப்பிறப்பின் விழா அன்பு, அமைதி என்னும் நற்செய்திகளை மனித மனங்களில் பதிவுச் செய்யட்டும். கடவுளுக்கும் மனிதனுக்கும் ஏற்பட்ட இழப்பு நிவர்த்தியாகட்டும். அன்பும் அமைதியும் அகிலமெங்கும் பரவ, புது உலகம் காண நம்மையே கருவிகளாக மாற்றுவோம். ஆண்டவரின் பிறப்பு மீட்பின் உதயம். அந்த மீட்பர் நம்மிடையே குடிகொண்டு நம்மோடு கூடாரம் அடித்து உடன் பயணிக்கிறார். இணைந்து பயணிப்போம். அன்பிலும் அமைதியிலும் வாழ்வோம்.



# இயக்குநரின் இதயத்திலிருந்து....

**பாலன் இயேசுவில் பேரன்பும் பெருமகிழ்ச்சியும் கொண்ட மிட்ஸ் தோழர்களே!**

வணக்கம்! டிசம்பர் மாதம் என்றாலே நமக்குக் கொண்டாட்டம் தான். இயேசுவின் பிறப்பு விழாவை டிசம்பர் 25ஆம் நாள் மட்டுமே கொண்டாடி வெறுமனே கடந்து செல்லும் சாதாரண மனிதர்கள் நாம் இல்லை. ஏனெனில், மிகவும் எதிர்பார்க்கப்பட்ட மெசியாவின் பிறப்பு ஒரு வரலாறு மட்டுமல்ல; மாறாக, மாறுபட்ட ஓருலகின் பிறப்பு. அன்பையும் அமைதி வாழ்வையும் அடிப்படையாகக் கொண்ட இறையாட்சி சமூகத்தை கனவு கண்ட குழந்தையின் பிறப்பு. ஆனால், நமது வாழ்வு ஆழ்ந்த தயாரிப்புகளின்றி, நீண்ட போராட்டமின்றி எதையும் எளிதாக நமக்குத் தருவதில்லை. தம் பிறப்பிற்கு முன்னதாகவே உயிர்காக்கும் பொருட்டு அலைந்து திரிந்து, அகதியாக மாட்டுத் தொழுவில் தஞ்சம் அடைந்தார் இயேசு. தனது பெற்றோரோடு தந்தைக் கடவுளின் விருப்பத்திற்கு ஏற்ப, குடும்பத்தின் ஏழ்மை மற்றும் வறுமைப் பிடியிலும் தொலைந்து போகாமல் சமூகத்திற்காக தன்னை தற்காத்துக் கொண்டார்.

இன்று, குழந்தைகளின் ஏக்கமும் அவர்கள் பயணிக்க வேண்டிய நீண்ட துயர பாதைகளும் பெருகிக் கொண்டே செல்கின்றன. திருத்தந்தை நம் காலத்தை அமைதியின் பஞ்சமென குறிப்பிடுகிறார். போர் மற்றும் இயற்கைப் பேரிடர்களால் மிகுந்த இன்னலுக்குள்ளாகுபவர்கள் குழந்தைகளே. நேற்று இன்றல்ல; மாறாக, நீண்ட காலமாகவே குழந்தைகளை கண்டு கொள்ளாமையும் அவர்களின் உரிமைகளை அசட்டை செய்வதும் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. அவர்களது எதிர்காலம் பற்றிய கேள்விகள் நமது திருஅவை மற்றும் குடிமைச் சமூகத்தின் பார்வைகள், திட்டங்கள், செயல்பாடுகள் அனைத்தையும் மறுபரிசீலனை செய்வதாக அமைகின்றன.

பெற்றோர்கள் தம் பிள்ளைகளின் உடல் மன ஆரோக்கியம், கல்வி மற்றும் ஏதோவொரு வேலை என அவற்றை மட்டும் அமைத்துக் கொடுக்க முயலுவது இறையாட்சியை பின்தங்கச் செய்வதாகும். எப்போதும் தனித்தவர்களாகவே சிந்திக்காமல் மனிதர்களைச் சமூகமாக காண முயல வேண்டும். மரியா யோசேப்பு தம்பதியினரால் பாதுகாக்கப்பட்ட குழந்தை இயேசு, சமூகத்தை வழிநடத்துவதற்காகவே நாசரேத்தில் தயாரிக்கப்படுகிறார்.

இவ்வாண்டின் கிறிஸ்துபிறப்பு விழாவில், குழந்தை இயேசுவின் கருணைமுகம், நம் அனைவரது பார்வையையும் நம் வாழிடங்களில் பல்வேறு இன்னல்களால் துயருறும் குழந்தைகள் மீது திருப்புவதை உணர்வோம். அவர்களை மீட்க, சமூக அக்கறையை நமது வாழ்வின் அடிப்படைச் செயல்பாட்டு நெறியாக மாற்றுவோம். புத்தாண்டில் புதுமனிதர்களாக, தெளிவுள்ளம் படைத்தவர்களாக நடை பயில்வோம்!

*அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!*

என்றும் அன்புடன்,
**அருட்தந்தை. முனைவர் ஜெரோம் .C**
*இயக்குநர், மிட்ஸ்*



# கிறிஸ்துமஸ்

## காரிருளிலிருந்து ஒளியை நோக்கி



**Fr. Suresh Antony**
*பங்குத்தந்தை, சிவலோகம்*



அப்பத்தின் நாடாம் பெத்லகேமில்
சூசை மரியின் புதல்வனாய்
பூமிதனில் பிறந்த இறைமகனே - உம்
பிறப்புதனில் பூமியும் புனிதம் அடைந்ததுவே

காரிருள் அகற்றிய ஒளி விளக்கே
ஞானிகள் வணங்கிய மனுமகனே
வறுமையும், வன்மமும் அழித்தருளும்
வளமையும், பொறுமையும் தந்தருளும்

சண்டையும், பகைமையும் ஒழித்திடுவாய்
சாந்தி, சமாதானம் தந்திடுவாய்
தயவாய் எம்மை காத்திடுவாய்
அன்பால் அகிலத்தை நிறைத்திடுவாய்
கிறிஸ்துவில் அன்புக்குரியவர்களே,

*அனைவருக்கும் கிறிஸ்துமஸ் பெருவிழா நல்வாழ்த்துக்கள்!*

"காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்தள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது" (எசாயா 9:12). ஆம் துயர முற்றிருந்த மக்களை நோக்கி எசாயா இறைவாக்கினர் வரவிருக்கின்ற அரசர் தங்களுக்குச் செய்யப் போவதைக் குறித்து கூறுகின்றார். கிறிஸ்துமஸ் ஒரு மகிழ்ச்சியின் நாள். கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையேயான தூரத்தை சுருக்கி கடவுள் மனிதனாக இப்பாரில் அவதரித்த அற்புதமான நாள். "வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார்". (யோவான் 1:14) அடிமைத் தளைகள் உடைய வேண்டும். மனிதனின் மாண்பு மதிக்கப்பட வேண்டும். சாதி, மத, பேதம் மாற வேண்டும், ஆண்டவர் முன் அனைவரும் சமம் என்னும் மனித மாண்புக் கொள்கைகளை கிறிஸ்துமஸ் பெருவிழா நம்முன் எடுத்துரைக்கின்றது.

### கிறிஸ்துமஸ் நமக்குணர்த்தும் உண்மைகள்

☞ **இறைவன் மனிதனுடைய மொழியில் தோன்றுகின்றார்**

மனிதனுடைய மொழி என்ன? இறைவன் மனிதனின் எந்த மொழியில் தோன்றுகின்றார்? Edmuna J Dunn என்னும் இறையியலாளர் இங்ஙனம் கூறுகின்றார். "Incarnation is God's gracious self-disclosure reaching out to humans as an invitation, as well as promise, to participate in God's own life of unfathomable love, mediated to as through persons, nature, history everyday experience and in an ultimate way, in an through God's very word Jesus Christ". கடவுளுடைய வார்த்தை மனிதனாக உருவெடுத்து மனிதனுடைய அனுதின வாழ்க்கை சூழ்நிலைகளோடு வாழ்ந்து மனிதனுக்கும், புனிதனாக வாழ முடியும் என்பதை எடுத்துரைக்கும் ஒரு அழைப்புதான் கிறிஸ்துமஸ் நிகழ்வின் / விழாவின் மையம்.

எல்லா மனிதரும் எளிதில் புரிந்துகொள்ள முடியும் என்னும் மொழியான "மனித உடல்" என்ற மொழியைக் கடவுள் தேர்ந்தெடுத்து மனித உடலில் தோன்றுகின்றார். The language of human being in "BODY". கடவுள் உடலாக வருகின்றபொழுது மனிதன் எளிதில் புரிந்து கொள்கின்றான்.

☞ **கிறிஸ்துமஸ் மகிழ்ச்சியின் நன்னாள்**

"இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கின்றேன்" (லூக்கா 2:10). ஆம் இது ஒரு மகிழ்ச்சியின் நன்னாள். ஏன் / இறைவன் நம்மைத்தேடி வருகின்றார். மற்ற மதங்களில் எல்லாம், மனிதன் கடவுளைத் தேடி அலைகின்றான் என்றால் இங்கே கடவுள் மனிதனைத் தேடி வருகின்றார். வானதூதர்கள் ஹாலேலூய்யா பாட, ஆட்டிடையர்கள் ஆர்ப்பரித்து ஆட, பிரபஞ்சமே பேருவகைக் கொண்டது. பரமனின் பிறப்புதனில் வண்ண வண்ண விளக்குகள், மின்னித்துலங்கும் ஒளி விளக்குகள், கிறிஸ்துமஸ் தாத்தா, நட்சத்திரங்கள் என்று இன்று கிறிஸ்துமஸ் பண்டிகையை நாமும் மகிழ்வுடன் கொண்டாடுகின்றோம். அணுகமுடியாத ஒளியில் மின்னும் இறைவன் குழந்தையாய் மனிதக் கரங்களில் தவழ்வதைக் காணும்போது மகிழ்ந்து ஆர்ப்பரிக்காமல் வேறென்ன செய்வது?

☞ **கிறிஸ்துமஸ் - கண்ணீரில் புன்னகையின் நாள்**

இயேசுவின் பிறப்பு கிறிஸ்தவர்களாகிய நமக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வந்தது. ஆனால் இயேசுவின் பிறப்பையொட்டிய நிகழ்வுகளைப் பார்த்தால், எங்குமே பேரச்சம்... குழந்தைகள் கொலைசெய்யப்படுகிறார்கள்... குழந்தை இயேசுவைக் கொண்டு அங்கும் இங்குமாக அலைகின்றார்கள். இப்படி வருத்தமான நிகழ்வுகளும் அரங்கேறுகின்றது. இயேசு மனிதனாகப் பிறந்ததன் நோக்கமே. நமக்காக தன்னுயிரை தந்து நம்மை விண்ணுலகில் கொண்டு செல்வதே!

ஆக இவ்வருட கிறிஸ்துமஸ் நமக்குத் தருகின்ற உண்மையான அழைத்தலோடு நாம் பயணிப்போம். மனித மாண்பை மதிப்போம். மனித மாண்புக்கு எதிராக இவ்வுலகில் நடக்கின்ற எல்லா இருளின் செயல்களுக்கு எதிராக குரல் கொடுப்போம். மனித உடலானது இன்பம், இலாபம் இவைக்கு அப்பாற்பட்டது என்ற ஒளியின் பாதையில் பயணிப்போம். எல்லா மனிதரும் கடவுளின் படைப்பு என்பதை ஏற்றுக்கொள்வோம். மகிழ்ச்சியாய் இருப்போம், மகிழ்வோடு கிறிஸ்துமஸ் கொண்டாடுவோம். அனைவருக்கும் நல்ல ஒரு புத்தாண்டும் அமைய ஜெபிக்கின்றேன்.

*Mery Christmas &*
*Happy New Year!*

## ஜோக்ஸ்

ஒருவர் தனது மாமியாருக்கு ஒரு SMS அனுப்பினார்

"Your product (daughter) not cooking, food properly"

மாமியாரின் பதில்

"Product sold warranty expired. So manufacturer not responsible" !!!

---

# பணி
# சிறக்க
# வாழ்த்துக்கள்!



மிட்ஸ் சமூகப்பணி நிறுவனத்தின்
புதிய செயல் இயக்குநராக பொறுப்பேற்று
கொண்ட **அருட்தந்தை**
**முனைவர். ஜொறோம் C** அவர்களை
"ஐக்கிய சுடர் இதழ்"
வழியாக வரவேற்கின்றோம்!





மிட்ஸ் சமூகப்பணி நிறுவனத்தின்
செயல் இயக்குநராக கடந்த 5 ஆண்டுகள்
சிறப்பாக பணியாற்றி எங்களோடு
பயணித்த பாசமிகு
**அருட்தந்தை ஜாண்குமார் K**
அவர்களுக்கு "ஐக்கிய சுடர் இதழ்"
வழியாக நன்றிகளை தெரிவித்து
கொள்கிறோம்!



**திருமதி. சஜிதா**
*அனிமேட்டர், கோள்பிங்*

# உலக தபால் தினம்

கடிதங்கள் வாழ்வில் அனைத்து தருணங்களிலும் நம்மிடம் வலம் வந்தன. தொழில்நுட்ப வளர்ச்சியால் ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்வதற்கு இன்று இணையதளம், மின்னஞ்சல், அலைபேசி என பல தொழில்நுட்ப வசதிகள் வந்து விட்டன. இதற்கு முன் தகவல் பரிமாற்றத்திற்கு தபால் மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

## நோக்கம்

இந்தியாவில் அக்டோபர் 9-ம் தேதி உலக தபால் தினமாக கொண்டாடப்படுகிறது. இதன் நோக்கம் இந்திய அஞ்சல் துறையின் நோக்கத்தையும் குறிக்கோளையும் மக்களிடையே பிரபலப்படுத்தி பொது மக்களுக்கான தபால் சேவையினை மேம்படுத்தி பொதுமக்கள் அதிகமாக பயன்படுத்திகொள்ள வழிவகை செய்வதே ஆகும். உலக தபால் அமைப்பு 1847-ல் சுவிட்சர்லாந்தில் தொடங்கப்பட்டது. இதில் இந்தியா உள்ளிட்ட 150 நாடுகள் உள்ளன. மேலும் தபால் துறையின் சேவைகளைப் பாராட்டும் விதமாகவும், திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காகவும் தபால் தினம் கடைபிடிக்கப்படுகிறது.



## வரலாறு

பழங்காலத்தில் புறாவின் கால்களில் கடிதத்தை கட்டி தகவல்கள் அனுப்பப்பட்டன. மன்னர்கள் ஆட்சியின்போது ஒற்றர்கள் மூலமாக தகவல்கள் பரிமாறப்பட்டன. பின்னர் தபால் துறை மூலமாக தகவல்கள் பரிமாறப்பட்டன. தற்போது தபால் எழுதும் பழக்கம் இல்லாததால் சுயமாக எழுதும் பழக்கம் இளைஞர்களுக்கு குறைந்து வருகிறது. இருப்பினும் உலகில் தபால்துறை ஏதாவது ஒரு வழியில் மக்களுக்கு பயன்படுகிறது. இந்தியாவில் அலுவல் ரீதியான கடிதங்கள் உள்ளிட்டவற்றை இன்னும் தபால் துறை கையாள்கிறது.

## இந்தியா அஞ்சல் துறையில் முதலிடம்

உலகிலேயே அதிக தபால் நிலையங்களை கொண்ட நாடாக இந்தியா உள்ளது. இந்தியா அஞ்சல் துறை 1764-ல் தொடங்கப்பட்டது. தற்போது நாடு முழுவதும் 1,55,333 தபால் நிலையங்கள் செயல்படுகின்றன. இதில் 89 சதவீதம் கிராமங்களில் உள்ளன. இந்தியா முழுவதும் 23 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. இத்துறையில் ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வங்கி வசதி

பதிவு தபால், விரைவு தபால், ஸ்டாம்பு விற்பனை, இ-போஸ்ட், மணி ஆர்டர், பார்சல் சர்வீஸ் மற்றும் சேமிப்பு கணக்குகள் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது வங்கி வசதியும் தொடங்கப்பட்டுள்ளது.

## காத்திருத்தலின் சிறப்பு

இன்றைய தலைமுறையினருக்கு தபால் பற்றி தெரிந்தாலும் கூட அதன் முக்கியத்துவம் தெரிய வாய்ப்பில்லை. தொழில் நுட்ப வளர்ச்சிக்கு முன்பு தபால் தான் ஒருவருக்கு தகவல் அனுப்ப பயன் பட்டது. தனக்குப் பிடித்தவர்களிடமிருந்து கடிதம் வரும் போது அதை படித்து உணர்ந்து மனம் மகிழும் தருணம் தற்போது கிடைக்காது. அப்போது கடிதத்திற்காக காத்திருக்கும் தருணம் மிக இனிமையாக இருக்கும். அதாவது காத்திருத்தல், எழுத்துக்கள் மூலமாக அன்பை உணர்தல், அந்த தபாலை பொக்கிஷமாக வைத்திருப்பது போன்ற சின்ன சின்ன நிகழ்வுகளில் அவ்வளவு அளவற்ற மகிழ்ச்சி தரும்.

இன்று கடிதம் என்பது ஒரு குறுஞ்செய்தி ஆக மட்டுமே உள்ளது. எல்லாமே விரைவில் கிடைக்கிறது. இதில் காத்திருத்தல் கிடையாது. எழுத்துக்களை உணரும் தருணம் கிடையாது. எல்லாம் விரைவாகவே முடிந்துவிடும். தற்போது கடிதங்கள் மற்றும் தபால் பற்றியும் பள்ளி மாணவர்களுக்கு பள்ளி பாடங்களில் கற்றுக் கொடுத்தாலும் அது படிப்பளவில் மட்டுமே உள்ளது. செயல்பாட்டில் இல்லை எழுதும் திறன் படிப்படியாக குறைந்து வருகிறது.

இன்று முகநூல் மற்றும் வாட்ஸ்அப் என எத்தனையோ நவீனங்கள் நொடிப்பொழுதில் நமது எண்ணங்களை மற்றவர்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டிவிடுகிறது. ஆனால் சில ஆண்டுகளுக்கு முன்பு வரை அன்பொழுக வார்த்தைகளைப் பயன்படுத்தி நட்புகளும், உறவுகளும் முத்து முத்தாய் நமக்கு எழுதிய கடிதங்களை பிரித்து படித்து ரசித்த போது ஏற்பட்ட பரவசமும், புத்துணர்வும் இப்போது இல்லை என்பது உண்மை. கடிதங்கள் வாழ்வில் அனைத்து தருணங்களிலும் நம்மிடம் வலம் வந்தது. நட்பு, பாசம், கோபம், தபம், காதல், மோதல் என்று அனைத்தையும் கொட்டித் தீர்க்கும் வடிகாலாகவும் இருந்தது.

எனவே நம்பிக்கையோடு மீண்டும் கரங்களில் பேனாவைத் தாங்கி கடிதங்களைத் தீட்டுவோம்.

**"வாழ்க்கையில் சிலரை மறக்க முடியாது...**
**சிலரை பிரிய முடியாது . . . .**
**மறக்காமல் நீங்கள் இருந்தால் . . . .**
**பிரியாமல் நான் இருப்பேன் . . . . .**
**உங்கள் தபால்"**




- ❖ தேவைகள் இன்றி இறைவனை வணங்கும் போது உங்கள் தேவைக்கு அதிகமாகவே உங்களுக்கு நல்லது செய்வார்.
- ❖ கொடுப்பவர்களுக்கு தெரியாது கேட்பது கடவுள் என்று . . . ஆனால் கேட்பவர்களுக்கு தெரியும் கொடுப்பது கடவுள் என்று . . .
- ❖ யாரிடம் பணம் வாங்கினாலும் அதற்கு ”வட்டி” உண்டு திருப்பி தரவேண்டும். ஆனால் அப்பாவிடம் வாங்கும் பணத்திற்கு கணக்கும் கிடையாது; திருப்பித்தர வேண்டிய தேவையும் இல்லை. கேட்கும் போதெல்லாம் பணம் தந்த அப்பாவை கடைசி காலத்தில் தவிக்கவிட்டு விடாதீர்கள் . . .
- ❖ இளமையில் பேச நேரமில்லாமல் வாழ்ந்த வர்கள் . . . முதுமையில் மனிதர்கள் இல்லாமல் வாழ்கிறார்கள்
- ❖ தாயின் கடைசி காலம் வரை பணிவிடை செய்து கவனிக்கும் மகளை விட, தன் கடைசி காலம் வரை மகளுக்கு பணிவிடை செய்யும் அம்மாக்களே அதிகம் . . . .

### கலாச்சாரம்

ஓர் ஏட்டில் (8) வளர்க்காத பிள்ளையும்
ஈ ரெட்டில் (16) கற்காத கல்வியும்
மூவெட்டில் (24) முடியாத திருமணமும்
நாலெட்டில் (32) பெறாத பிள்ளையும்
ஐயெட்டில் (40) சேர்க்காத செல்வமும்
ஆறெட்டில் (48) தேடாத புகழும்
ஏழெட்டில் (56) சுற்றாத தேசமும்
ஏட்டெட்டில் (64) கிடைக்காத ஓய்வும்
பயனில்லை

# பாலியல் வன்கொடுமை



பாலியல் பலாத்காரம் என்பது உலகெங்கிலும் உள்ள சமூகங்களை பாதித்துள்ள ஒரு துயரமான சமூகப்பிரச்சனையாகும். இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல. பாலியல் பலாத்காரம் என்ற கொடூரமான குற்றம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடல் மற்றும் உளவியல் அதிர்ச்சியை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், பாலின சமத்துவமின்மை மற்றும் பயனுள்ள சட்ட மற்றும் சமூக வழிமுறைகளின் பற்றாக்குறையின் ஒரு பெரிய பிரச்சனையையும் பிரதிபலிக்கிறது. இந்தக் கட்டுரை இந்தியாவில் பாலியல் பலாத்காரச் சூழலை ஆராய்கிறது. மணிப்பூரில் ஒரு குறிப்பிட்ட சம்பவத்தை எடுத்துக்காட்டுகிறது. மேலும் இந்த பரவலான பிரச்சனையை எதிர்த்துப் போராடுவதற்கான கூட்டு முயற்சிகளின் அவசியத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

## இந்திய சூழலில் பாலியல் பலாத்காரம்

இந்தியாவின் சிக்கலான சமூகக் கட்டமைப்பு, பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் மரபுகளால் குறிக்கப்படுகிறது. பெரும்பாலும் ஆழமான வேரூன்றிய பாலின சார்புகளுடன் குறிக்கிடுகிறது. ஆணாதிக்க நெறிமுறைகள், சமமற்ற அதிகார இயக்கவியல் மற்றும் பல பிராந்தியங்களில் கல்விக்காக மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் ஆகியவை பாலியல் பலாத்காரம் உட்பட வன்முறைக்கு பெண்கள் பாதிக்கப்படக்கூடிய சூழலுக்கு பங்களித்துள்ளன.இந்தியாவில் பாலியல் பலாத்கார வழக்குகள் விசாரணை மற்றும் வழக்கு விசாரணையின் போது அடிக்கடி சவால்களை எதிர்கொள்கின்றன. பாதிக்கப்பட்டவர்களை குற்றம் சாட்டுதல், சமூகக் களங்கம் மற்றும் சட்ட நடவடிக்கைகளில் தாமதம் ஆகியவை பாதிக்கப்பட்டவர்களைப் புகாரளிப்பதிலிருந்து தடுக்கிறது. மேலும் போதிய ஆதரவு அமைப்புகள் மற்றும் சட்ட அமலாக்க அதிகாரிகள் மற்றும் மருத்துவ நிபுணர்களிடையே உணர்திறன் இல்லாமை ஆகியவை உயிர் பிழைத்தவர்கள் எதிர்கொள்ளும் அதிர்ச்சியை அதிகரிக்கின்றன.

## மணிப்பூர் சம்பவம்

தேசத்தின் மனசாட்சியை உலுக்கிய ஒரு சம்பவம் மணிப்பூரில் நடந்தது. அங்கு ஒரு கொடூரமான கும்பல் பலாத்காரம் நிகழ்ந்தது. இது பரவலான எதிர்ப்புகளுக்கு வழிவகுத்தது. இந்தச்சம்பவம் பெண்களின் பாதிப்பை மட்டுமல்லாமல் விரைவான நீதியை வழங்குவதில் சட்ட அமைப்பின் திறமையின்மையையும் எடுத்துக்காட்டுகிறது. சட்ட அமலாக்கம், நீதித்துறை நடைமுறைகள் மற்றும் சமூக அணுகுமுறைகளில் விரிவான சீர்திருத்தங்களின் அவசியத்தை இந்த வழக்கு அடிக்கோடிட்டுக் காட்டியது. மணிப்பூர் சம்பவம் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகளை எடுத்துக் காட்டுகிறது.பெலிஸ் சீர்திருத்தம், நீதித்துறை பொறுப்புக் கூறல் மற்றும் பாலியல் குற்றவாளிகளைச் சுற்றியுள்ள தண்டனையின்மை ஆகியவை கலாச்சாரத்தில் அகற்ற வேண்டியதின் அவசியம் குறித்த விவாதங்களை இந்த சம்பவம் தூண்டியது.

## பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்படும் குழந்தைகள்

12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு பாலியல் ரீதியாக சித்திரவதை செய்து கொலை செய்வது இன்றைய சமூகத்தில் நடந்து வருகிறது. தற்போது பூதப்பாண்டி பகுதியில் 3 ½ வயது குழந்தைக்கு 60 வயது முதியவர் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். மேலும் பெற்றோரை இழந்த 16 வயது பெண் குழந்தைக்கு குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரி 3 வருடங்களாக


எல்லாம் தெரியும் என்பவர்களைவிட என்னால் முடியும் என்று முயற்சிப்பவரே வாழ்வில் ஜெயிக்கின்றார்.

பாலியல் வன்கொடுமை செய்த நிகழ்வு அனைவரும் அறிந்ததே.

### உறவினர்களால் பாலியல் தொந்தரவு

சொந்த தந்தையினால் தொந்தரவு, உறவினர்களால் தொந்தரவு என இன்று பெண் பிள்ளைகள் யாரை நம்பி செல்வதென்றே தெரியாமல் தவிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பெண்களுக்கு இன்று பாதுகாப்பு இல்லை. ஊடகங்கள் செல்போன் மற்றும் திரைப்படங் களிலும் பாலுணர்வை துாண்டும் விதத்தில் திரையிடப்படுகிறது. இவ்வாறு இன்றைய சமூகம், ஆபத்து நிறைந்த சமூகமாக மாறிவிட்டது.

### சட்ட ரீதியான நிலை

விசாகா என்பவருக்கு ராஜஸ்தானில் கடந்த 1997-ம் ஆண்டு நடந்த பாலியல் தொந்தரவு குறித்த வழக்கு மிகப் பிரபலமானது. ராஜஸ்தான் மாநிலத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும் அநீதியான குழந்தைத் திருமணத்தை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட பெண்கள் முன்னேற்றத் திட்ட ஊழியர் ஒருவர் பலவந்தமாக பலரால் கற்பழிக்கப்பட்டார் ஆனால் அவருக்கு ராஜஸ்தான் அரசு நீதி வழங்கவில்லை. குற்றவாளிகள் வெளியில் விடப்பட்டனர். இதையடுத்து விசாகாவை உச்சநீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்ய பல மகளிர் நல அமைப்புகள் வலியுறுத்தின. இந்த வழக்கின் தீர்ப்பில் உச்சநீதி மன்றம் கூறிய சட்டரீதியான கருத்துக்கள் வேலை செய்யும் இடங்கள் மட்டுமன்றி பல்கலைக் கழகங்கள் போன்ற இடங்களுக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

### கல்வி நிலையங்களில் பாலியல் தொந்தரவு

மாதா, பிதா, குரு, தெய்வம் என்று கூறுவர். ஆனால் இன்று கல்வி நிலையங்களில் ஆசிரியர்கள் மாணவர்களை தவறான வழியில் வழிநடத்துதல், ஆபாச படங்களை அனுப்பி விடுவது. பாலியல் சீண்டல்களை ஏற்படுத்துவது போன்ற பிரச்சனைகள் ஆசிரியர்களால் மாணவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. வழிகாட்ட வேண்டிய கல்வி ஆசிரியர்கள் தவறு செய்யும் போது அவர்களுக்கு தக்க தண்டனை வழங்கப்பட வேண்டும்.

### தடுப்பு நடவடிக்கைகள்

பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (Posco) போன்ற கடுமையான சட்டங்கள் இருந்த போதிலும் இந்தியாவில் கற்பழிப்பு சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவது ஆழ்ந்த கவலையை அளிக்கிறது. இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு சட்ட நடிவடிக்கைகள் மட்டுமன்றி, சமூக மனப்பான்மை, கல்வி மற்றும் சட்ட அமலாக்கத்திலும் மாற்றங் களை உள்ளடக்கிய பன்முகத் தன்மையிலான அணுகுமுறை தேவைப்படுகிறது.

### 1. சட்டங்களை திறம்பட செயல்படுத்துதல்

கடுமையான சட்டங்கள் நடைமுறையில் இருந்தாலும், அவற்றை திறம்பட செயல்படுத்துவது சவாலாகவே உள்ளது. முறையான விசாரணை சரியான நேரத்தில் சோதனைகள் மற்றும் சட்டத்தின் சீரான பயன்பாடு ஆகியவை இத்தகைய குற்றங்கள் அனுமதிக்கப்படாது என்ற வலுவான செய்தியை அனுப்புவது அவசியம்.

### 2. பொது விழிப்புணர்வு மற்றும் கல்வி

வன்முறைக் கலாச்சாரத்திற்கு பங்களிக்கும் மனப்பான்மை மற்றும் ஒரே மாதிரியானவற்றை சவால் செய்பதில் விரிவான பாலியல் கல்வி முக்கிய பங்கு வகிக்கிறது.

### 3. சட்ட அமலாக்கத்தை வலுப்படுத்துதல்

பாதிக்கப்பட்டவர்கள் உணர்வுப்பூர்வமாக நடத்தப்படுவதையும் வழக்குகள் திறமையாக கையாளப்படுவதையும் உறுதிசெய்ய காவல்துறை மற்றும் நீதித்துறை சீர்திருத்தங்கள் மிகவும் அவசியமானது.

### 4. நெறிமுறைகள் மற்றும் அணுகுமுறை களை நிவர்த்தி செய்தல்

சமூக பிரச்சாரங்கள், ஊடகங்கள் மற்றும் ஈடுபாடு மூலம் ஆழமாக வேருன்றிய பாலின சார்பு மற்றும் ஆணாதிக்க மனப்பான்மை சவால் செய்யப்பட வேண்டும்.

### 5. உயிர் பிழைத்தவர்களுக்கான ஆதரவு

உயிர் பிழைத்தவர்களுக்கான ஆதரவு அமைப்பு களை வழங்குதல், ஆலோசனை, சட்ட உதவி மற்றும் பாதுகாப்பான இடங்கள் உட்பட, அவர்களுக்கு நீதி மற்றும் குணப்படுத்துதல் போன்ற கடினமான செயல்பாட்டின் மூலம் உதவுவது அவசியம்.

### 6. தொழில்நுட்பம் மற்றும் அறிக்கையிடல் முறைகள்

வழக்குகளை எளிதாக புகாரளிப்பதற்கும் கண்காணிப்பதற்கும் தொழில்நட்பத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

## 7. விரைவான நீதி

விரைவான விசாரணைகள் சாத்தியமான குற்றவாளிகளைத்தடுக்கலாம். மற்றும் தப்பிப் பிழைத்தவர்களுக்கு மூடுதலை வழங்கலாம். நீதித்துறை செயல்பாட்டில் ஏற்படும் தாமதங்கள், பாதிக்கப்பட்டவர்கள் சட்ட நடிவடிக்கை எடுப்பதிலிருந்து ஊக்கமளிக்கலாம்.

## 8. சமூக ஈடுபாடு

பாலியல் வன்முறைக்கு எதிராக சமூகங்களை ஈடுபடுத்துவது ஆதரவு வலையமைப்பை உருவாக்கி, அத்தகைய குற்றங்களை தடுப்பதில் பொறுப்புணர்வை வளர்க்கும்.

## 9. பெண்களுக்கு அதிகாரமளித்தல்

பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் கல்வி ரீதியாகவும் பெண்களை மேம்படுத்துவது சக்தி இயக்கவிலை மாற்றுவதற்கும் பாதிப்பைக் குறைப்பதற்கும் பங்களிக்கும்.

## சிரிப்பு



திருமணம் முடிந்து மணப் பெண் மாப்பிளை வீட்டிற்கு செல்ல தயாராகி கண்களில் கண்ணீருடன் புறப்படுகிறாள். அப்போது அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு சிறுவன் அவன் தந்தையிடம் கேட்கிறான் . . .

**மகன் :** அப்பா ... ஏன் அந்த கல்யாணப் பெண் அழுகிறாள்?

**அப்பா :** ஏன் என்றால் அவள் தனது பெற்றோரைப் பிரிந்து ஒரு புது இடத்திற்கு செல்கிறாள் . . . .

**மகன் :** அப்போ அந்த மணமகன் ஏன் அழவில்லை? . . .

**அப்பா :** அவன் நாளைல இருந்து தினமும் அழுவான் ! ! !

## 10. ஆண்களை ஈடுபடுத்துதல்

பாலின சமத்துவம் மற்றும் சம்மதம் பற்றிய விவாதங்களில் ஆண்களை ஈடுபடுத்துவதினால் ஆண்கள் மக்கள்தொகையில் இருந்து தீங்கு விளைவிக்கும் நடத்தைகள் மற்றும் அணுகுமுறை களை சவால் செய்யலாம்.

இந்தியாவில் பாலியல் பலாத்தாரப் பிரச்சனைக்கு சட்ட சீர்திருத்தங்கள், கல்வி, விழிப்புணர்வு மற்றும் சமூக அணுகுமுறைகளில் மாற்றங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய பன்முக அணுகுமுறை தேவைப்படுகிறது. இருப்பினும், நீடித்த மாற்றம் என்பது பாலின சமத்துவ மின்மையை நிவர்த்தி செய்வது விரிவான பாலியல் கல்வியை ஊக்குவித்தல் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறையை நிலைநிறுத்தும் பாரம்பரிய விதிமுறைகளை சவால் செய்வது ஆகியவையும் அடங்கும்.

தொகுத்தவர்
**திருமதி. கிருஷ்ண குமாரி (அல்போன்சா)**
*அமைப்பாளர்*

| | |
|---|---|
| அழிவை தருவது | - ஆணவம் |
| ஆபத்தை தருவது | - கோபம் |
| இருக்க வேண்டியது | - பணிவு |
| இருக்கக் கூடாதது | - பொறாமை |
| உயர்வுக்கு வழி | - உழைப்பு |
| கண்கண்ட தெய்வம் | - பெற்றோர் |
| செய்ய வேண்டியது | - உதவிகள் |
| செய்யக் கூடாதது | - துரோகம் |
| நம்பக்கூடாது | - வதந்தி |
| நழுவ விடக்கூடாதது | - வாய்ப்பு |
| நம்முடன் வருவது | - புண்ணியம் |
| பிரிக்ககூடாதது | - நட்பு |
| மறக்கக் கூடாதது | - நன்றி |
| மிகமிக நல்லநாள் | - இன்று |
| மிகப்பெரிய தேவை | - அன்பு |
| மிகக் பெரிய நோய் | - பேராசை |
| மிகவும் சுலபமானது | - குற்றம் காணல் |
| மிகப்பெரிய வெகுமதி | - மன்னிப்பு |

தொகுத்தவர் : **திருமதி. சஜிதா**
*அனிமேட்டர், கோள்பிங்*

## தெரிந்து கொள்வோம்....

நம்ம வயசு என்னன்னு கேட்டா விரல் விட்டு எண்ணத் தேவையில்லை. இந்த காலண்டரை பார்த்தாலே போதும் (2023).

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1943 | 80 | 1963 | 60 | 1983 | 40 | 2003 | 20 |
| 1944 | 79 | 1964 | 59 | 1984 | 39 | 2004 | 19 |
| 1945 | 78 | 1965 | 58 | 1985 | 38 | 2005 | 18 |
| 1946 | 77 | 1966 | 57 | 1986 | 37 | 2006 | 17 |
| 1947 | 76 | 1967 | 56 | 1987 | 36 | 2007 | 16 |
| 1948 | 75 | 1968 | 55 | 1988 | 35 | 2008 | 15 |
| 1949 | 74 | 1969 | 54 | 1989 | 34 | 2009 | 14 |
| 1950 | 73 | 1970 | 53 | 1990 | 33 | 2010 | 13 |
| 1951 | 72 | 1971 | 52 | 1991 | 32 | 2011 | 12 |
| 1952 | 71 | 1972 | 51 | 1992 | 31 | 2012 | 11 |
| 1953 | 70 | 1973 | 50 | 1993 | 30 | 2013 | 10 |
| 1954 | 69 | 1974 | 49 | 1994 | 29 | 2014 | 9 |
| 1955 | 68 | 1975 | 48 | 1995 | 28 | 2015 | 8 |
| 1956 | 67 | 1976 | 47 | 1996 | 27 | 2016 | 7 |
| 1957 | 66 | 1977 | 46 | 1997 | 26 | 2017 | 6 |
| 1958 | 65 | 1978 | 45 | 1998 | 25 | 2018 | 5 |
| 1959 | 64 | 1979 | 44 | 1999 | 24 | 2019 | 4 |
| 1960 | 63 | 1980 | 43 | 2000 | 23 | 2020 | 3 |
| 1961 | 62 | 1981 | 42 | 2001 | 22 | 2021 | 2 |
| 1962 | 61 | 1982 | 41 | 2002 | 21 | 2022 | 1 |

## ஜோக்ஸ்



மகன் : கணக்கு பாடம் சொல்லி தாங்க பா . . . .

அப்பா : எனக்கு கணக்கு தெரியாது பா . . . எங்கப்பா அம்மா என்னை படிக்க வைக்கல

மகன் : உனக்கு மட்டும் எவ்வளவு நல்ல அப்பா அம்மா கிடைச்சிருக்காங்க

---

அண்ணன் : இதுக்கு மேலே நான் +2 பாஸ் ஆவேன்னு நம்பிக்கை இல்ல. நான் தற்கொலை பண்ணிக்கலாம்னு இருக்கேன்

தங்கை : அறிவு இருக்காடா உனக்கு ? கிறுக்கு தனமா முடிவு பண்ற . . . செத்துட்டா, திரும்ப பொறந்து வருவ, அப்புறம் மறுபடியும் LKG-ல இருந்து படிக்க சொல் வாங்க - பரவாயில்லையா

**திருமதி. புஷ்பலதா**
*கணக்கர்*

## மிட்ஸ் சுயஉதவிக்குழு மற்றும் கிளஸ்டர் கூட்டங்களின் ஓர் கண்ணோட்டம்...




குஞ்சால்விளை சுயஉதவிக்குழு




தச்சூர்கோணம் சுயஉதவிக்குழு



நாகர்கோவில் II கிளஸ்டர் கூட்டம்



கிராத்தூர் கிளஸ்டர் கூட்டம்

# மெல்ல மெல்ல முன்னேற்றத்தின் பாதையில்



## திருமதி. சிவசெல்வகுமாரி...

கன்னியாகுமரி மாவட்டதில் நட்டாலம் ஊராட்சியில் அழகிய சிற்றூர் வாளோடு. இயற்கை வனப்போடு எழில் மிகு அழகோடு இயற்கை ரசனையோடு அமைந்திருக்கும் பகுதியை வாழ்விடமாகக் கொண்டு வசித்து வருபவர் நம் கதாநாயகி திருமதி. சிவசெல்வகுமாரி. இவர்களுக்கு அழகிய இரண்டு பெண் பிள்ளைகள். பிள்ளைகளில் முதல் மகள் 8ம் வகுப்பு மற்றும் இரண்டாம் மகள் 6ம் வகுப்பு பயின்று வருகிறார்கள். கணவருடைய உழைப்பால் குடும்பம் வளமையோடு வாழ்ந்து வந்தது. திடீரென்று திருமதி. சிவசெல்வ குமாரியின் கணவருக்கு சிறுநீரக பாதிப்பு நோயினால் அவதிப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிட்சை பயனின்றி இறந்தார். 8 வருடங்கள் வருத்தமான காலகட்டங்கள். . . என்ன தொழில் செய்து முன்னேற வேண்டுமென்று தெரியாத தருணங்கள். . . .. வாழ்க்கை செலவுகளுக்காக மிகவும் கஷ்டப்பட்ட நேரங்கள். . . அந்நேரத்தில் மிட்ஸ் சுயஉதவிக் குழுவான வாளோடு IV சுயஉதவிக்குழுவைச் நாடினார்கள். குழுவில் ஓர் உறுப்பினரானார். இக்குழுவிலிருந்து குடும்ப வளர்ச்சி திட்ட பயனாளிகளை தேர்வு செய்யும் போது குடும்ப வளர்ச்சித் திட்ட விதிமுறைகளுக்கு ஏற்றார் போல் உள்ளதால் திருமதி. சிவசெல்வ குமாரி அவர்களையும் மிட்ஸ் குடும்ப வளர்ச்சி திட்ட குழுமத்தால் தேர்ந்தெடுத்தார்கள். ஆரம்ப காலகட்டத்தில் குடும்ப வளர்ச்சி திட்டத்திலிருந்து சிறுதொழில் செய்ய நிதி உதவிக் கிடைத்தது. இந்த உதவியால் ஆடு வளர்த்தல் தொழிலைச் நேர்த்தியுடன் செய்து வந்தார். ஆட்டிலிருந்து வரும் சிறிய வருமானத்தால் தனது ஏழ்மையான வாழ்க்கையின் ஒருபடி மேலோட்டத்தில் வாழ்ந்து வந்தார். பின்னர் தனது ஆடு வளர்த்தல் தொழிலில் உள்ள ஆட்டுக்கழிவு (ஆட்டு புளுக்கை) இயற்கை உரமாக விற்பனை செய்யலாம் என ஆலோசித்து இதனை இயற்கை விவசாயத்திற்கு ஏற்றார்போல மாற்ற நினைத்து, ஆட்டுக்கழிவு களைப் பொடி செய்து விற்க நல்லதொரு மிக்ஸியும் வாங்கி, ஆட்டுக் கழிவுகளைப் பொடி செய்து விற்பனையும் துவங்கினார். விற்பனைக்கான 1கிலோ ஆட்டுக்கழிவு விலை ரூபாய் 30/- ஆகும். இதனால் வருமானம் கிடைத்தது. இவ்வருமானத்தினால் பிள்ளை களுடைய கல்விச் செலவு, குடும்ப செலவு, சேமிப்பு என வாழ்க்கையின் பல கால கட்டத்தை கடந்து வருகிறார்கள்.

இச்சூழ்நிலையில் குடும்பவளர்ச்சி திட்ட இந்திய அலகு ஒரு சிறப்பான திட்டத்தை செயல்படுத்த தீர்மானித்தது. அதாவது கொரோனா காலகட்டத்தில் தொழில்கள்



மந்தநிலையை அடைந்துள்ளதால் சிறப்பு IGP திட்டத்தை கொண்டு வந்தது. அத்திட்டத்தின் விதிமுறைகளின் படி ஒரு நபருக்கு 100000/- ரூபாய் மூன்று கட்டமாக இலவசமாக வழங்கியது. அதன்பேரில் திருமதி. சிவசெல்வ குமாரியையும் தேர்வு செய்யப்பட்டார்கள். அவர்கள் தேர்வு செய்த தொழில் துணி வியாபாரம். தனது வீட்டின் மேல்மாடிதளத்தை துணி வியாபாரக் கடையாக மாற்றினார்கள். வியாபாரத்துக்காக துணிகளை மொத்தமாக வாங்கி, தனது வீட்டில் இருந்துகொண்டே துணி வியாபாரத்தை மெல்ல மெல்ல துவங்கினார்கள். அதுமட்டுமல்லாமல் வீடு வீடாக சென்று துணிகளை வியாபாரம் செய்தார்கள். தற்போது நல்ல லாபமும் கிடைத்து வருகிறது. மேலும் மிட்ஸ் வழி நடத்தப்படும் பல்வேறு ஆளுமைப் பயிற்சிகளில் பங்கெடுத்து தனது திறமையும் வெளிப்படுத்தி வருகிறார்கள்.

மிட்ஸ் மரியன் மூவ்மெண்ட் திட்டத்தின் பயனாளியாகவும் செயல்படுகிறார்கள். மிட்ஸ் திறன்பயிற்சிகளில் வாயிலாக மரியன் மூவ்மெண்ட் திட்டத்தின் செல்லங்கோணம் கிளஸ்டரின் செயலராகவும் செயல்பட்டு




அத்திட்டத்தின் வாயிலாகவும் சிறு சிறு தொழிற்கடனுதவிகளையும் பெற்று தையல் மிஷின் வாங்கி துணி தைத்துக் கொடுத்தும் வாழ்வில் முன்னேறிக் கொண்டே இருக்கி றார்கள். மேலும் மிட்ஸ் மரியன் மூவ்மெண்ட் திட்டத்தின் செயற்குழு உறுப்பினராகவும் இருந்து வருகிறார்கள். முன்னேறும் பாதைகளில் உள்ள சிறு சிறு தடைகளை படிகற்களாக மாற்றி உழைப்பால் உயர்ந்தவராக வாழ்ந்து வருகிறார்கள் திருமதி. சிவ செவ்வ குமாரி.

தொகுத்தவர் :

**திருமதி. வினிதா**

*குடும்ப வளர்ச்சி திட்டம் அலகு* I




மஞ்சளோடு வேப்பிலை, அறுகம் புல், அரைத்து வாரம் ஒரு தடவை உடம்பில் நன்றாக தேய்த்து குளித்து வந்தால் தோல் நோய்கள் ஓடிப்போகும். சொரி சிரங்கு, படை, அரிப்பு போன்ற சரும வியாதிகள் இருப்பின் மஞ்சள் தடவி குளித்தால் குணமாகும். பாலில் மஞ்சள் பொடி அரைகிராம் கலந்து கொதிக்க வைத்து குடிக்க புற்றுநோய் குணமாகும். சாம்பிராணி புகை போடும் போது அதில் மஞ்சள் பொடி, தேங்காய் மட்டை நார் கலந்து புகை பிடிக்க மண்டைச்சளி, தலைவலி, மூக்கடைப்பு, நீர்க்கோவை குணமாகும்.




கடவுள : உனக்கு என்ன வரம் வேண்டும்?

பக்தன் : அழகான மனைவி வேண்டும்

கடவுள் : நீ முஸ்லீம்னா கத்ரீனா தாரேன். இந்துனா அனுஷ்கா தாரேன். கிறிஸ்தவன்னா ஜெனிலியா தாரேன். உன் பெயர் என்ன?

பக்தன் : அப்துல் நாராயண பெர்னான்டஸ்

கடவுள் : ! ! ! ! !

எந்த "புக்"-க பார்த்தாலும் தூக்கம் தூக்கமா வருது . . . .

இந்த "பேஸ்புக்" பாத்தா மட்டும் கருமம் தூக்கமே வரமாட்டேங்குது.

# சமூக சீர்கேடுகளின் ஓர் அவலம்....

"குணநலம் என்பது பட்டத்தாலும் பெரும் பதவியாலும் வருவதன்று, நற்பண்புகள் சேர்த்து பண்பட்ட உள்ளத்தில் தோன்றுவதாகும்" என்பது வாழநினைத்தால் வாழலாம் என்னும் நூலின் ஆசிரியர் முனைவர் சி. இலட்சுமணன் அவர்களின் கருத்தாகும்.

பண்டைய காலங்களில் மக்கள் எங்கு சென்றாலும் நேர்மையான முறையில் சென்று வீடு திரும்பிய கால கட்டங்கள் மாறி தற்போது பிள்ளைகள் கல்லூரி மற்றும் பள்ளிக்கூடங்களுக்கு சென்று திரும்பி வருவதே பயத்தோடு வருகின்ற காலகட்டங்கள். குழந்தைகள் கடத்தல், மயக்க மருந்துகள் மற்றும் போதைப் பொருட்களுக்கு உட்படுத்தப்படுகின்ற நிலைமை. ஒவ்வொரு மனிதனின் உயிரும் விலைமதிப்புமிக்கது. ஆனால் தற்போது மனிதனை மனிதன் ஒரு பொருட்டாக கருதாத நிலைமை, மனித உயிரும் கடவுளின் சாயல், மதிப்புமிக்கதாக கருதப்பட வேண்டும்.

எல்லா வகையான தொழில்களுக்கும் ஓய்வு வயது நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போதைய நிலைமையில் அரசியல்வாதிகளுக்கு மட்டும் ஓய்வு வயது இல்லாத காலகட்டங்கள். அதாவது 80-90 வயதிலும் கூட அரசியல்வாதிகளின் அரசியல் மோகத்தில் ஆட்சி இருக்கின்றது நாட்டின் இன்றைய போக்கு. இந்நிலைமை மாறி வர வேண்டும்.

மருத்துவ உலகம் என்பது மக்களுக்கு இறைவனின் அடுத்தபடி என்பார்கள். ஆனால் தற்போதைய நிலைமை என்பது மனிதனின் கண்டுபிடிப்பின் நிலைமையால் சர்க்கரை நோயாளி களின் சர்க்கரை அளவு என்பது முந்தைய காலங்களில் 200 என்ற நிலையில் இருந்தது. ஆனால் தற்போது 90 என்ற அளவில் மாறிவிட்ட அவலநிலை. இதன் காரணமாக சிறு வயது குழந்தை முதல் மருந்து மாத்திரைகளுக்கு திணிக்கப்பட்ட சூழ்நிலையில் தள்ளப்படுகிறார்கள். இதனால் பணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து மனிதனுக்கு முக்கியத்துவம் இல்லாத முறைகள். மனித உயிர் மாண்புமிக்கது. விலை மதிப்பு பெற்றது. மருத்துவ துறையினர் பணம் சம்பாதிக்கவே மருத்துவ பணி செய்கின்ற நிலைமை மாறி மக்களுக்காவே மக்களாகவே சேவை செய்கின்ற நிலைமை வரவேண்டும்.

ஊடகங்களின் தாக்கத்தால் சிறு வயது குழந்தை முதல் பெரியவர்கள் வரை ஊடகங்களின் தாக்குதலுக்கு ஆளாக்கப் படுகின்றனர். அதாவது கொரோனா காலகட்டங்களில் மாணவர்களுக்கு Smart Class என்ற பெயரில் குழந்தைகள் ஊடகங்களுக்குள் தள்ளப்பட்டனர். இதனால் கதிர்வீச்சின் தாக்குதலுக்கு உட்படுகின்றனர். மேலும் ஊடக விளையாட்டு, Mobile Phone, TV, Computer போன்ற மின்னணு சாதனங்களுக்கு அடிமையாகின்றன.

காவலன் நண்பன் என்ற நிலைமை மாறி மக்களை மிரட்டி வருகின்ற சூழல். அதாவது மனித உயிருக்கு மதிப்பு கொடுக்காத ஒரு சமூகமாக மாறிக் கொண்டிருக்கிறது. பொது இடங்களில் பல ஆயிரக்கணக்கான மக்கள் கூடும் இடங்களில் காவலர் வாகன ஓட்டிகளுக்கு நல்ல வழி கூற வேண்டிய நேரங்களில் ஒலிப்பெருக்கியினால் பல மைல்கள் மக்களுக்கு கேட்கும் வகையில் முரட்டுத்தனமாக திட்டுவதை கண்கூடாக காண்கின்ற தருணங்கள். இந்நிலைமை மாற வேண்டும். காவலர் நண்பராக மாற வேண்டும். மனிதனை மதிக்கின்ற உலகத்தில் பணத்தை மதிக்கின்ற சமூகமாக மாறி கொண்டிருக்கிறது இவ்வையகம். இந்நிலைமை மாறி மனிதநேயத்துடன் வாழ வேண்டும்.

மேல்நாட்டு ஆதிக்க கலாச்சாரம் நம் நாட்டில் பரவுவதால் மகளிர் அணிந்து வந்த தாவணி, சால்வார் மாறி வெளிநாட்டு பேஷன் என்ற பெயரில் லக்கீன்ஸ், ஜீன்ஸ் உடைகள் மாற்றி போடுவதால் பலவிதமான நோய்கள் மட்டுமல்லாமல் ஆண்களால் தேவையற்ற பிரச்சனைகளுக்கு பெண்கள் உட்படுத்தப்படு கிறார்கள். மேலும் அயல்நாட்டு உணவு முறையான ஐஸ் கிரீம், சாக்லெட், பாஸ்ட் புட் போன்ற உணவுகளில் பிள்ளைகள் மூழ்கி நம் நாட்டு பாரம்பரிய உணவுகளை ஒதுக்கி வாழ்கின்ற சூழல் நிலவி வருகின்றது. நம்முடைய உணவு முறைகளான உணவே மருந்து என்றும் நிலைமையில் நாம் வாழ விழைவோம்.

**"உழைக்கிற நோக்கத்தை உறுதிப்படுத்துங்கள்!**
**வாய்மையை வாழ்க்கை முழுவதும் கடைபிடியுங்கள்!**
**விடாமுயற்சியை நண்பனாக்கி கொள்ளுங்கள்!**
**வெற்றி உங்களை நாடி வரும்!**

**திருமதி. வினிதா** *(ஒருங்கிணைப்பாளர்)*

# பிற நிகழ்வுகள்

1. 19.10.2023 அன்று Sriram Cancer Care Centre மற்றும் மிட்ஸ் நிறுவனமும் இணைந்து கிறிஸ்துவிளாகம் ஆலய வளாகத்தில் வைத்து இலவச புற்றுநோய் பரிசோதனை முகாமினை நடத்தியது. இந்த முகாமில் 30 பயனாளிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



2. 23.10.2023 அன்று தளிர்கள் உலகம் திட்டத்தின் முன்னாள் பயனாளிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும் ஆஸ்தி அமைப்பின் வருடாந்திர கூடுகையானது மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தினை திட்ட அலுவலர் திரு.ஷாஜன் ஜோசப் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்கள். உறுப்பினர்கள் குழு வாரியாக பிரிக்கப்பட்டு ஊடக போதையிலிருந்து உங்களை பாதுகாத்து கொள்வது எப்படி என்னும் தலைப்பில் கருத்து பகிர்வு நடத்தப்பட்டது. இந்த கூட்டத்தில் 31 ஆஸ்தி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

3. 03.11.2023 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து ஆரி தையல் கலை பயிற்சியின் நிறைவு விழா நடைபெற்றது. இந்த நிகழ்வினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் தலைமையேற்று நடத்தி பயிற்சியில் பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்களை வழங்கினார்கள்.

4. 04.11.2023 அன்று மிட்ஸ் தளிர்கள் உலகம் திட்டத்தில் புதிதாக சேர்க்கப்பட்ட 16 பயனாளிகளுக்கான வழிகாட்டுதல் பயிற்சி மிட்ஸ் திட்ட அலுவலர் திரு ஷாஜன் ஜோசப் அவர்களால் நடத்தப்பட்டது.

5. 08.11.2023 அன்று பூதப்பாண்டியில் வைத்து மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் தலைமையில் திட்ட அலுவலர் திரு.ஷாஜன் ஜோசப் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. பேட்ரிக் ஆன்றனி முன்னிலையில் நாகர்கோவில் பணிமண்டலங்களில் உள்ள சுய உதவி குழு உறுப்பினர்களுக்கான ஆரி தையல் கலை பயிற்சி வகுப்புகள் துவங்கி வைக்கப்பட்டன.

6. 13.11.2023 அன்று மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்களின் பிரியாவிடை நிகழ்ச்சியும் புதிய இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்களின் பொறுப்பு நியமன நிகழ்வும் ஆயர் மேதகு வின்செண்ட மார் பவுலோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் மண்டல இயக்குநர்கள், மலங்கரை ஸ்கூல் ஆப் காமர்ஸ் கல்லூரியின் பணியாளர்கள் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.



# வாழைப்பழ கேக்

### தேவையான பொருட்கள்

சுத்தமான மைதா மாவு -1 கிலோ வாழைப்பழம் 2 பெரியது, சர்க்கரை 2 கப், முட்டை- 2, வெண்ணை 100 கிராம், பேக்கிங் பவுடர் இரண்டு டீஸ்பூன், பேக்கிங் சோடா அதே அளவு, உப்பு அரை டீஸ்பூன், புளித்த தயிர் 50 மி.லி. வென்னிலா எசன்ஸ் 1 டீஸ்பூன், உலர்ந்த திராட்சை தேவையான அளவு

### செய்முறை

மைதா பேக்கிங் பவுடர் பேக்கிங் சோடா உப்பு எல்லாவற்றையும் ஒரு பாத்திரத்தில் இட்டு ஒரு போர்க்கினால் கடைந்து கொள்ளவும். வட்டமான அல்லது சதுரமான ஒரு கேக் டின்னை வெண்ணை தடவி தயார் செய்து கொள்ளவும், இப்பொழுது வாழைப்பழத்தை துண்டுகளாக வெட்டி மசித்துக் கொள்ளவும் பழம் மிகக் கனிந்திருப்பது அவசியம். மசித்த பழத்துடன் முட்டை மற்றும் சீனி சேர்க்கவும்.

பின்னர் இக்கலவையில் வெண்ணை சேர்த்து நன்றாக கலக்கும் வரை அடித்துக்கொள்ளவும். பிறகு தயிர் மற்றும் வெண்ணிலா எசன்ஸ் சேர்த்து கலக்கவும். ஒவணை 350/180 செ.க்கு ப்ரீ ஹீட் செய்து கொள்ளவும். பின்னர் ஈரமாவுடன் காய்ந்த மாவைச் சேர்த்து அதிகமாக கடைந்து விடாமல் பக்குவமாக சேர்க்கவும். மிகவும் திரவப் பதமாக இல்லாமல் குறிப்பிட்ட பதத்திற்கு வந்தவுடன் முன்னரே வெண்ணை தடவி வைத்திருந்த கேக் டின்னில் மாவை இட்டு மேல் பகுதியானது சமமாக இருக்கும் படி செய்து கொண்டு ப்ரீ ஹீட்டரில் வைத்து முக்கால் மணிநேரம் அல்லது கலவை பொன்னிறமாக மாறும் வரை ஹீட் பண்ணவும். பின்பு கேக் டின்னை வெளியே எடுத்து சிறு துண்டுகளாக வெட்டி தட்டில் வைத்து பரிமாறவும். அசத்தலான வாழைப்பழ கேக் தயார்.




# விடுகதைகள்

1. பூவோடு பிறந்து, நாவோடு கலந்து விருந்தாவான் மருந்தாவான். அவன் யார்?
2. இலையுண்டு கிளையில்லை, பூ உண்டு மணமில்லை, காய் உண்டு விதையில்லை, பட்டை உண்டு கட்டை இல்லை, கன்று உண்டு பசு இல்லை அது என்ன?
3. இரு கொம்புகள் உண்டு மாடு அல்ல, வேகமாய் ஓடும் மான் அல்ல, கால்கள் உண்டு மனிதனல்ல -அது என்ன?
4. தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான் அவன் யார்?
5. பூ பூக்கும் காய் காய்க்கும் ஆனால் பழம் பழுக்காது அது என்ன?
6. எவ்வளவு முயன்றாலும் அவனை கடிக்க முடியாது அவன் இல்லாமல் உணவே இல்லை. அவன் யார்?
7. எங்க அக்கா சிவப்பு, குளித்தால் கருப்பு அது என்ன?
8. ஆலமரம் தூங்க அவனியெல்லாம் தூங்க, ஸ்ரீரங்கம் தூங்க திருப்பாற்கடல் தூங்க, ஒருவன் மட்டும் தூங்கவில்லை அவன் யார்?
9. உடம்பில்லா ஒருவன் பத்து சட்டை அணிந்திருப்பான்? அவன் யார்?
10. இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்?

**விடைகள்**

1. தேன்
2. வாழை
3. சைக்கிள்
4. தொலைபேசி
5. தேங்காய்
6. தண்ணீர்
7. அடுப்புக்கரி
8. மூச்சு
9. வெங்காயம்
10. தேள்

**திருமதி. புஷ்பலதா** (*கணக்கர்*)



**பி. அபினேஷ்**,
விமலபுரம்

# கோல்பிங் தின விழா

கோல்பிங் இந்தியா சார்பாக அடோல்ப் கோல்பிங் அவர்களின் நினைவு நாளை அனுசரிக்கும் விதமாக ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் 21-ம் நாள் கோல்பிங் தினம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டிற்கான கோல்பிங் தின கொண்டாட்டமானது 21.10.2023 அன்று மிட்ஸ் அரங்கத்தில் வைத்து நடத்தப் பட்டது. விழா துவக்கமாக மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் தலைமையில் நன்றி திருப்பலி நிறைவேற்றப் பட்டது. பின்னர் ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கோல்பிங் இயக்கத்தின் பொதுக்குழு தலைவர் திரு.சசன்குமார் அவர்கள் விருந்தினர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். பின்னர் மார்த்தாண்டம் மறைமாவட்ட கோல்பிங் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் அறிமுக உரையாற்றினார்கள். தொடர்ந்து மேதகு ஆயர் வின்செண்ட் மார் பவுலோஸ் அவர்கள் அளித்த சிறப்பு செய்தியில்கோல்பிங் குடும்பங்களின் வளர்ச்சி மற்றும் அவற்றின் திட்டங்கள் வழியாக அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரங்கள் உயர்வடைந்து வருகின்றன. மேலும் இத்திட்டம் பல்வேறு வளர்ச்சி நிலைகளை எட்ட வேண்டும் என்று வாழ்த்தினார்கள்.அதனை தொடர்ந்து சிறப்பான முறையில் செயல்பட்ட கோல்பிங் குடும்ப பொறுப்பாளர்ளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பின்னர் இறுதி ஜெபத்துடன் விழா நிறைவு பெற்றது. இவ்விழாவில் மொத்தம் 816 கேல்பிங் குடும்ப பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.





அத்திபழத்தை ஒரு நாளைக்கு 5 சாப்பிட்டால் நரம்பு தளர்ச்சி நீங்கும்

# மிட்ஸ் குடும்பவளர்ச்சித் திட்டம்

குடும்பவளர்ச்சித் திட்டம் இந்தியா சார்பாக (SAFP Jubilee Houseing Programme ) மிட்ஸ் குடும்பவளர்ச்சித் திட்ட அலகு I & II -ன் பயனாளிகளில் சொந்தமாக வீடு இல்லாத 4 பயனாளிகளுக்கு வீடு கட்டும் விதமாக ரூபாய் 200000/- இலவசமாக வழங்கப்படும். அதன் முதல் கட்ட தொகையாக ரூபாய் 100000 பயனாளிகளின் வங்கி கணக்கில் 01-12-2023 அன்று செலுத்தப்பட்டது. பெயர் விபரம் வருமாறு:

| வ.எண் | வீட்டு திட்ட பயனாளியின் பெயர் | இடம் | SAFP FDP அலகு எண் | வீட்டு திட்டத்திற்காக வழங்கப்பட்ட தொகை(ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1 | A. சஜிதா | நடைக்காவு | அலகு I | 100000/- |
| 2 | D. மினி | கோயிக்க தோப்பு | அலகு I | 100000/- |
| 3 | ரதி சுரேஷ் | வெள்ளங்கோடு | அலகு II | 100000/- |
| 4 | புஷ்பராணி | கிராத்தூர் | அலகு II | 100000/- |
| | | | **மொத்தம்** | **400000/-** |



குடும்ப வளர்ச்சி திட்டஅலகு II ன் பயனாளிகளை திட்ட ஒருங்கிணைப்பாளர் (நடைக்காவு கிளஸ்டர்) தொழில்செய்ய ஊக்கப்படுத்துதல்



குடும்ப வளர்ச்சி திட்டஅலகு I ன் பயனாளிகளை திட்ட ஒருங்கிணைப்பாளர் (பனிச்சமூடு கிளஸ்டர்) தொழில்செய்ய ஊக்கப்படுத்துதல்

## மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வு (MTT)

மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வு 28-01-2024 மற்றும் 25-02-2024 ஆகிய நாட்களில் மிட்ஸ் அறிவுத்திறன் தேர்வு நடத்தப்படும் மையங்களில் வைத்து மதியம் 2.00 மணி முதல் 4.00 மணிவரை நடைபெறும். பெயர் பதிவு செய்த குழந்தைகள் தகுந்த மையங்களில் பங்கெடுக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.



# மிட்ஸ் செயல் திட்டங்களின் ஓர் பார்வை

20.09.2023 அன்று பெண்களுக்கான செல்போன் பழுதுபார்க்கும் பயிற்சியினை மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் துவங்கி வைத்தார்கள். திரு.இராதாகிருஷ்ணன் அவர்கள் பயிற்சியை நடத்தினார்கள். மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து 15 நாட்கள் நடைபெறும் இந்த பயிற்சியில் 30 பெண்கள் சேர்ந்து பயன்பெற்று வருகின்றனர்.





பெங்களூரை சேர்ந்த திருமதி. மாலினி வெங்கட் அவர்கள் மிட்ஸ் நிறுவனத்திற்கு வருகை தந்து மிட்ஸ் நிறுவனம் வழியாக ஆரி தையல் கலை பயிற்சி பெற்ற பயனாளிகளை சந்தித்தார்கள். மேற்கத்திய ஆரி வேலைப்பாடுகள் குறித்து பயிற்சி பெற வேண்டும் என்று அவர்களை ஊக்கப்படுத்தி ஆலோசனை வழங்கினார்கள். இந்த கூட்டத்தில் மொத்தம் 35 பெண்கள் கலந்து கொண்டனர்.







ஆரி வேலைப்பாடு - பயிற்சியாளர்
திருமதி விஜயலெட்சுமி மிட்ஸ் மார்த்தாண்டம் பணிமண்டல சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து பயிற்சி வகுப்பு நடத்துகிறார்.



அழகு கலைப்பயிற்சி வகுப்பானது களியக்கவிளைபணி மண்டலம் சார்பாக பின்குளம் ஆலயத்தில் சென்மேரீஸ் ஹாளில் வைத்து திருமதி. சூசன்னா லிம்பா அவர்கள் முன்னிலையில் துவங்கப்பட்டது.

# மிட்ஸ் ஆஸ்தி - 2023



### 1. ஊடகப் போதையிலிருந்து விடுபட ....

- ஊடகங்களைப் பயன்படுத்தி நேரத்தை வீணடிக்காமல், சிறந்த பொழுதுபோக்குகளை கொண்டிருத்தல். (எ.கா. புத்தகம் வாசிப்பு, செய்தித்தாள் வாசிப்பு, பூந்தோட்டம் உருவாக்குதல் மற்றும் செல்லப்பிராணிகள் வளர்த்தல்)
- அலைபேசியில் விளையாடுவதைத் தவிர்த்து, விளையாட்டு மைதானத்தில் விளையாட வேண்டும்
- Android phone தவிர்த்து பட்டன் phone உபயோகிக்கலாம்.
- தனித்திருக்காமல் குழுவாக குடும்பமாக இணைந்து இருக்கும்போது ஊடகத்தின் அதிக பயன்பாட்டை தவிர்க்கலாம்.
- ஊடகம் வாயிலாக கிடைக்கப்பெறும் தகவல்களின் உண்மைத் தன்மையை அலசி ஆராய்தல் வேண்டும்.
- குடும்பமாக இணைந்து உணவருந்தும் போது தனியாக அமர்ந்து phone பார்த்து சாப்பிடும் பழக்கத்தை மாற்ற முடியும்.
- தேவையற்ற செயலிகளை (Apps) install பண்ணுவதை தவிர்த்தல், உபயோகிக்கும் செயலிகளின் உண்மைத்தன்மையை அறிதல்.
- ஊடகத்தின் பாதிப்பு குறித்தான விழிப்புணர்வு உருவாக்குதல்.
- அவசரத் தேவைகளுக்கு மட்டும் online shopping, Food ordering முதலியவை பண்ணுதல்.
- சுய விவரங்கள், புகைப் படங்கள், phone Numbers ஆகியவை share பண்ணும் போது எச்சரிக்கையாக இருத்தல்
- நமக்கு விருப்பமான பாடல்களை கேட்பதின் வாயிலாக
- Mobile la Notification off செய்தல்
- Net- pack போடாமல் இருப்பது
- Motivational speech கேட்பது
- புத்தகத்தில் கவிதை, படம் வரைந்து திறமைகளை வளர்த்து கொள்ளலாம்
- வெளியிடத்தில் பயணம் செய்வது
- குழந்தைகளுக்கு mobile phone கொடுப்பதை தவிர்க்கலாம்
- Online class முடிந்தவரை தவிர்க்கலாம்
- Time Schedule போட்டு நல்ல விதமான காரியங்களில் ஈடுபட வேண்டும்
- ஏழை எளிய மக்களுக்கு உதவி செய்வது அவர்களோடு நேரத்தை செலவிட வேண்டும்
- மரம் வளர்த்து அதனுடன் நேரத்தை களிக்க வேண்டும்
- தியானப் பயிற்சியில் ஈடுபட வேண்டும்
- சிறு வயதில் இருந்தே பெற்றோர்கள் பிள்ளைகளை கண்டிப்புடன் வளர்த்தால் ஊடகத்தின் தாக்கத்தில் இருந்து விலக முடியும்
- உறவினர்களிடம் நெருக்கமாக பழகி நேரத்தை செலவிட வேண்டும்
- ஊடகத்தில் நாம் செலவிடும் நேரத்தை குறைத்து நம்மிடம் என்ன திறமைகள் உண்டு என அறிந்து அதை வளர்க்க வேண்டும்
- பெற்றோர்கள் குழந்தைகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

### போட்டிகள் நிறைந்த உலகை எதிர் கொள்ள ....

- ஒவ்வொருவரும் அவரவர் விரும்பும் துறையை தேர்வு செய்து, சரியான திட்டமிடுதலோடு செயல்பட வேண்டும்.
- அவரவர் துறையில் புதுப்பித்து கொண்டே இருக்க வேண்டும்
- பொது அறிவு வளர்த்தல், குறிப்பாக தினசரி செய்தித்தாள் வாசித்தல்

- ஆங்கில அறிவை வளர்த்தல், ஆங்கிலத்தில் சரளமாக பேசும் திறமையை வளர்த்துக் கொள்ளுதல்
- வெறுமனே போட்டித் தேர்வுகளை எதிர் கொள்ளாமல், முறையான பயிற்சியோடு போட்டித் தேர்வுகளை எழுதவும்
- Hand work மற்றும் Smart work வேண்டும்
- சவால்களை நினைத்து வருந்தாமல், நேர்மையான எண்ணங்களை கொண்டிருத்தல் வேண்டும்
- வேலைவாய்ப்புகள் மற்றும் போட்டித்தேர்வுகள் பற்றி அதிகமாக அறிதல் வேண்டும்
- பட்டப்படிப்போடு Job oriented courses அதிகமாக படிக்க வேண்டும்
- வேலைவாய்ப்பை பெற்றுத்தரக்கூடிய திறமையைத் வளர்த்தல்
- அரசின் திட்டங்களை (நான் முதல்வன்) முறையாக பயன்படுத்துதல்
- சுயதொழில் உருவாக்குதல்
- இந்த உலகத்தில் வாழ்வதே மிகப்பெரிய சவால்
- இன்னொரு நபருடன் ஒப்பிடுவதை தவிர்க்க வேண்டும்
- தனக்கு என்று ஒரு தனி அடையாளத்தை உருவாக்க வேண்டும்
- ஒரு நபர் அவருக்கு விருப்பமான வேலையை தேர்ந்து எடுத்தால் சமூக மக்கள் புறங் கூறுவதை கண்டுகொள்ளக் கூடாது
- கிடைக்கிற வாய்ப்பை கைநழுவி விடக்கூடாது
- முயற்சியை ஒருபோதும் கைவிடக்கூடாது
- தோல்வி வந்தாலும் துவண்டு விடக்கூடாது.



- படிப்பு மட்டும் அல்லாமல் Dance, Song, Sports இல் திறமையை வளர்க்க வேண்டும்
- தலைவர்களின் புத்தகத்தை தெரிந்து படித்து அவர்களின் வாழ்க்கை முறை வழியாக சவால்களை சந்திக்கவேண்டும்.
- Goal set பண்ண வேண்டும்
- போட்டி மனப்பான்மையில் இருந்து கீழ்படிவதின் வழியாக விலகலாம்.
- அனைவரிடமும் அன்பு காட்டி பொறாமையை விலக்குவதன் வழியாக
- முன்னோர்கள் எழுதி வைத்த நூல்களை படித்தல்.
- அடுத்தவர்களிடம் உயர்வு தாழ்வு என்ற மனப்பான்மையை தவிர்க்க வேண்டும்
- போட்டி நிறைந்த இந்த உலகில் இருந்து விடுபட திறமையை வளர்க்க வேண்டும்
- தோல்வி வந்தாலும் அதை பொருட்படுத்தாமல் நம் முயற்சி அல்லது இலக்கை நோக்கி செல்ல வேண்டும்

பகிர்ந்து கொண்டவர்
**மிட்ஸ் ஆஸ்தி உறுப்பினர்கள்**



மிட்ஸ் ஆரி வேலைப்பாடுகளை கற்றுத் தேர்ந்து தொழில் முனைவோராக வேண்டும் என்னும் நோக்கத்தோடும், சான்றிதழ்களுடனும் ஆரி வேலைப்பாடு கலைஞர்கள்.



மிட்ஸ் சுயஉதவிக் குழுக்களிலிருந்து மிட்ஸ் அலுவலகத்தில் வந்து முறையாக செல்போன் பயிற்சிகளை பெற்று சான்றிதழ்களுடன், தொழில் முனைவோர்கள்.

# குறுக்கெழுத்துப்போட்டி

**உங்கள் மூளைக்கு ஓர் சவால்**

**இடமிருந்து வலம்:**

1. "உடலுக்கு புத்துணர்ச்சி தரும் பழம்" என்று சொல்லப்படும் பழம் எது? (5)
2. உருண்டை வடிவ முட்டைகளை இடும் ஒரே பறவை எது? (3)
5. யார் அழிக்கப்பட்டதின் நினைவாக "விஜயதசமி" பண்டிகை கொண்டாடப்படுகிறது? (5)
8. "தென்னிந்தியாவின் ஆக்ஸ்ஃபோர்ட்" என்று அழைக்கப்படும் இடம் எது? (7)
13. அகத்திக் கீரையில் எந்த வைட்டமின் உள்ளது? (1)
16. அல்லிமலர்களின் பூமி என்றழைக்கப்படுவது எது? (3)
18. "நீர்நாடு" என்று அழைக்கப்பட்ட நாடு எது?(2)
25. கிறிஸ்துமஸ் தினத்தன்று இறந்த (டிசம்பர்25,1972) தமிழகத் தலைவர் யார்?(4)

**மேலிருந்து கீழ்:**

3. இந்திய தேசியக் கொடியில் உள்ள அசோக சக்கரம் எதைக் குறிக்கிறது? (6)
4. தேன் மற்றும் பழங்களில் உள்ள இயற்கைச் சர்க்கரையின் பெயர் என்ன? (6)
9. "தேடுவதை நிறுத்தினால் தேடியது கிடைக்கும்" என்ற தத்துவத்தைக் கூறியவர் யார்?(6)
11. குதிக்க தெரியாத மிருகம் எது? (2)
14. ஒவ்வொரு வருடமும் பெருமளவில் நீரை கடலுக்கு எடுத்துச் செல்லும் நதி எது?(4)

**கீழ் இருந்து மேல்:**

12. அகில உலக ஆண்கள் தினம் எந்த மாதத்தில் கொண்டாடப்படுகிறது? (5)
15. இந்தியாவில் முதல் நடமாடும் ஸ்டேட் பாங்க் ATM எங்கு துவங்கப்பட்டது (5)
17. சூரியனின் வெப்பத்தை அளக்கும் கருவி ....... மீட்டர் ஆகும்(2)
19. ஏரி மாவட்டம் என்பது எது?(7)
21. இண்டர்நெட் (Internet) எந்த ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில் இயக்கும்படி உருவாக்கப்பட்டுள்ளது? (4)
23. உலகிலேயே முதல்முதலாக மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்திய (1790) நாடு எது? (5)
24. உலக அளவில் ஓவியர்கள் அதிகமாகப் பயன்படுத்தும் வண்ணக்கலவை எது?(4)
26. இந்தியாவின் இளவயது பிரதமர் யார்?(6)

**வலமிருந்து இடம்:**

5. உலகிலேயே கண் வங்கியை முதன் முதலில் நிறுவிய நாடு எது?(4)
6. தபால் தலையை வட்ட வடிவமாக வெளியிட்ட நாடு எது? (4)
7. தழும்பு ___ சமமான தமிழ் சொல் (2)
10. மின்சார வாஷிங்மெஷினைக் கண்டுபிடித்தவர் யார்? (3)
19. தமிழகத்தின் முதல் மாநகராட்சி எது?(3)
20. இலங்கையில் வயல்வெளி மான் என்படுவது ...... மான் ஆகும். (2)
22. சர்வதேச விமானங்களை இயக்கும் பைலட்டுகள், எந்த நாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அவர்கள் பேசும் ஒரே மொழி எது?(5)
27. சமீபத்தில் இந்தியாவில் பிளாஸ்டிக் பாட்டில் இல்லாத ஒரே ஊர் எது? (4)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | | | 3 | |
| 4 | | | | 5 | | | | | |
| | | | | | 6 | | 7 | | |
| | 8 | | | | | | | | |
| | | 9 | | | 10 | | 11 | | 12 |
| | | | | 13 | 14 | | | | |
| | 15 | | | | | 16 | | | |
| | | | | 17 | | | 18 | | |
| | | | | | | 19 | | 20 | |
| 21 | | | | | | | | 22 | 23 |
| ■ | 24 | 25 | 26 | | | | | | 27 |

**குறிப்பு :** சரியான பதில் எழுதும் நபருக்கு குலுக்கல் முறையில் தேர்வு செய்து தக்க பரிசு வழங்கப்படும். விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 2024 பிப்ரவரி 13. அதற்கு பின்வரும் விடைகள் நிராகரிக்கப்படும். புத்தகத்தின் இந்த பக்கத்தில் விடைகளை எழுதி கட் செய்து தபாலில் அல்லது அமைப்பாளர் வழியாக அனுப்பவும். நகல் அனுப்பினால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**முகவரி :** ஆசிரியர், ஐக்கியசுடர், மிட்ஸ் அலுவலகம், இடைவிளாகம், கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம் - 629163, தமிழ்நாடு.

**கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றி பெற்றவர்**
திருமதி. T. நிர்மலா, தாழான்விளை SHG, நடைக்காவு கிளஸ்டர், களியக்காவிளை மண்டலம்

**போட்டியில் ஆர்வத்துடன் பங்கு பெற்ற அனைத்து சுய உதவி குழு உறுப்பினர்களுக்கும் மிட்ஸ் நிறுவனத்தின் சார்பில் வாழ்த்துக்கள். தொடர்ந்து உங்கள் ஆதரவினை வேண்டுகிறோம்.**

---

# வாசகர் கவனத்திற்கு

மிட்ஸ் ஐக்கிய சுடர் இதழில் தங்களின் படைப்புகளை வரவேற்கப்படுகின்றன. மேலும் இவ்விதழில் தங்களின் விளம்பரங்கள் வெளியிட விரும்பினால் அதற்கான விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன

## விளம்பரம்

**இதழின் கடைசி பக்கம் (Back Cover Page)**

☞ முழு பக்கத்திற்கு கட்டணம் (கலர்) - Rs.2500 ☞ அரை பக்கத்திற்கு கட்டணம் (கலர்) -Rs.1250

**இதழின் முதல் பக்கத்தின் உள்பகுதிக்கு(Front Inner Page)**

☞ முழு பக்கத்திற்கு கட்டணம் (கலர்) -Rs.2000
☞ அரை பக்கத்திற்கு கட்டணம் (கலர்) -Rs.1000

**இதழின் கடைசி பக்கத்தின்உள் பக்கம் (Back Inner Page)**

☞ அரை பக்கத்திற்கு கட்டணம் (கலர்) -Rs.750 ☞ முழு பக்கத்திற்கு கட்டணம் (கலர்) -Rs.1500

**பிறந்தநாள் மற்றும் திருமண வாழ்த்துக்கள் (Black & White)**

☞ கால் பக்கம் கட்டணம் - Rs. 250 ☞ அரை பக்கத்திற்கு கட்டணம் -Rs.500
☞ முழு பக்கத்திற்கு கட்டணம் - Rs.1000

விளம்பரங்கள் வெளியிட விரும்புவர்கள் மிட்ஸ் அலுவலகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும் தங்களின் சொந்த படைப்புகள் மற்றும் விமர்சனங்களை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

## மிட்ஸ் அலுவலகம்

இடைவிளாகம், கழுவன்திட்டை, குழித்துறை அஞ்சல்
கன்னியாகுமரி மாவட்டம் - 629 163.
Email : mids.marthandam@gmail.com Website : www.mids.org.in
Ph : 04651 - 263390, 295690

# குமரி மாவட்டத்தில் கண்களுக்கு தெரிந்தும் தெரியாமல் இருக்கும் கசக்கும் உண்மைகள்...

1. கேன்சர் என்னும் கொடிய நோய் அதிகமாக பரவிவரும் மாவட்டம்.
2. பொறியியல் படித்த மாணவர்கள் கட்டிட வேலை பார்க்கும் மாவட்டம்
3. பிற மாவட்ட தமிழர்களால் மலையாளி எனவும், மலையாளிகளால் பாண்டி எனவும் அழைக்கப்படும் மக்கள் வாழும் மாவட்டம்
4. போதுமான நீர்வளம் இருந்தும் விவசாயம் சிறிது சிறிதாக ஒளிந்து கொண்டிருக்கும் மாவட்டம்
5. வரதட்சனை கொடுமை அதிகமாக உள்ள மாவட்டம்
6. கல்விக்கட்டண கொள்ளை அதிகமாக நடக்கும் மாவட்டம்
7. தமிழ்நாட்டின் மாவட்டங்களின் பட்டியலில் மட்டும் அல்ல சாலை மற்றும் பேருந்துகளின் தரத்திலும் கடைசிஇடம் வகிக்கும் மாவட்டம்
8. தமிழ்நாட்டில் அதிகமான எண்ணிக்கையில் வெளிநாடுகளில் வேலை செய்து நாட்டிற்கு பெருமளவு அன்னிய செலவாணி ஈட்டித் தரும் மக்கள் குமரி மாவட்ட மக்கள் ஆனால் அவர்களின் குடும்பங்களின் அவசர தேவைக்கு வெளிநாட்டு துணை தூதரக அலுவலகம் கூட இல்லாத மாவட்டம்.
9. பொறியியல் படித்த மாணவர்கள் தங்களது துறையில் குறைந்தது10000 ரூபாய் சம்பளத்தில் கூட வேலைவாய்ப்பு பெற இயலாத மாவட்டம்
10. அரசியல்வாதிகளாலும் ஆட்சியாளர்களாலும் ஓட்டுக்காக மட்டும் கவனிக்கப்படும் மாவட்டம்.
11. நெல்லுக்கு பெயர்பெற்ற நாஞ்சில் நாடு இனி ஏடுகளில் மட்டும்

*(வாட்ஸ்ஆப் தகவல்)*



## மரம்

வெட்டி எறியப்பட்ட இடத்தில் மீண்டும் முளைத்து வா . . .

வெட்டிக் களைந்தவனும் உன் நிழலில் இளைப்பாறட்டும் . . .



## வேதம் சொல்கிறது

ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள். உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள்

(1தெசலோணிக்கேயர் 5:15)

## மௌனமாக இரு

உனக்கு ஒன்று பிடிக்காத போது
உன்னை யாருக்குமே புரியாத போது
உன்னை விட்டு பிறர் விலகும் போது
உன்னோடு யாரும் பேசாத போது
உன்னை குறை கூறும் போது
உனக்கு கோபம் வரும் போது
உன்னை வெறுக்கும் போது
உனக்கு பிரச்சனை வரும் போது
மௌனம் ஒன்றே சிறந்தது



## வாயு தொல்லைக்கான மருந்து

வெதுவெதுப்பான 1 டம்பிளர் நீரில் சிறிது காயப்பொடி போட்டு ஆற்றி சிறிது சூடாக குடித்தால் வாயு பிரச்சனையில் இருந்து உடனடி நிவாரணம் பெற்று கொள்ளலாம்.



**திருமதி. விஜி**, வள்ளங்குழி சுயஉதவிக்குழு



# அடோல்ஃப் கோல்பிங்

அடோல்ஃப் கோல்பிங் 1813-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ம் நாள் ஜெர்மனியில் கொலோன் என்ற இடத்திற்கு அருகே உள்ள கெர்ப்பென் என்ற இடத்திலேயே பிறந்தார். அவருடைய பெற்றோர் ஏழைகளானாலும் ஆழ்ந்த இறைப்பற்றுள்ள வராக விளங்கினர். அவருடைய தந்தை ஒரு பண்ணையரிடம் அவருடைய ஆடுகளைப் பராமரித்து வந்தார். கோல்பிங்கின் தாய், வீட்டிலே பிள்ளைகளைப் பொறுப்புடன் கவனித்து வந்தார். கோல்பிங்கின் பெற்றோருக்கு 5 குழந்தைகள் அதில் கோல்பிங்தான் கடைசி பிள்ளை. உயர்கல்வி பெறும் வாய்ப்பு இல்லாததால் கோல்பிங் தனது 13-வது வயதிலேயே செருப்பு செய்யும் தொழிலைக் கற்றுக் கொண்டார். தனது 23ஆம் வயது வரை அவர் இத்தொழிலில் ஈடுபட்டார். அதன்பின் தான் ஒரு குருவாக வேண்டும் என்ற ஆசையால் இத்தொழிலை விட்டுவிட்டு 1837-ஆம் ஆண்டில் கொலோனில் உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து படிப்பைத் தொடர்ந்தார். நான்கு வருடங் களுக்கு பின் தன் படிப்பிற்காக டிப்ளமோ பெற்றார். அதன்பின் மியூனிக், போன் போன்ற இடங்களில் தத்துவ இயலையும் இறையி யலையும் முடித்த பின் கொலோனில் உள்ள Minoritic ஆலயத்தில் 1845 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் நாள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

குருப்பட்டம் பெற்ற பின் கோள்பிங் முதன் முதலாக எல்பர்பீஃல்டு என்ற இடத்தில் புனித லாரென்ஸ் தேவாலயத்தில் உதவிப் பங்கு குருவாகப் பணியேற்றார். எல்பர்பீஃல்டு என்ற இடம் ஜெர்மனியிலுள்ள ஒரு முக்கியமான தொழிற்சாலை நகரம் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து வேலைதேடி நகரங் களுக்கு வந்தவர்களின் கஷ்டங்களையும் துன்பங்களையும் கோல்பிங் இங்குதான் நேரடியாகக் கண்டுணர்ந்தார். பல இளைஞர் களுக்கு அங்குள்ள தொழிற்சாலைகளில் வேலை கிடைத்தாலும் தங்குவதற்கு அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. சாலை ஓரங்களில் உள்ள சத்திரங்களும், மனிதன் இருக்கக் சிறிதும் வசதியற்ற இடங்களுமே அவர்களுக்கு வீடாய் அமைந்தன. இத்தகைய ஒரு வாழ்க்கைக் சூழலில் பல இளைஞர்கள் படிப்படியாக தங்கள் பெற்றோருடன், சொந்த ஊருடன், இறுதியாக இறைவனிடமும் உறவை இழந்தனர்.

இவ்வாறு அனைத்து உறவுகளும் துண்டிக்கப்பட்டு ஆயனில்லா ஆடுகள் போல் இருக்கும் இளைஞர் சமுதாயத்துக்கு உதவ கோல்பிங் விருப்பம் கொண்டார். எனவே 1849-ம் ஆண்டு மே மாதம் 6-ம் நாள் கொலோனில் ஒரு இளந்தொழிலாளிகள் சங்கத்தை ஏற்படுத்தினார். அவ்வாறு அன்று ஆரம்பிக்கப்பட்ட இயக்கமே இன்று கோல்பிங் இயக்கம் என்று அவருடைய பெயரைத்தாங்கி உலகனைத்திலும் பரவி வளர்ந்து சிறந்து விளங்குகிறது.

- நல்ல கிறிஸ்துவனாக இரு
- செய்யும் தொழிலைச் செம்மையாகச் செய்
- நல்ல பெற்றோராக - தாயாக, தந்தையாக விளங்கு
- பொறுப்புள்ள குடிமகனாக இரு

என்ற தத்துவங்களோடு கோல்பிங் குடும்பம் இன்று 63 நாடுகளில் சிறப்புடன் செயல்பட்டு வருகிறது.



இந்த உலகத்தில் நாம் கற்றுக்கொண்ட பாடத்தை விட வறுமை, அவமானம், புறக்கணிப்பு இவைகள் கற்றுத்தந்த பாடமே அதிகம்.

# விண்ணைத் தொடு திட்டம் - வருடாந்திர ஆய்வு கூட்டம்



மிட்ஸ் நிறுவனத்தில் செயல்பட்டுவரும் விண்ணைத் தொடு குழந்தைகள் பாதுகாப்பு திட்டத்தின் வருடாந்திர ஆய்வு கூட்டமானது 09.10.2023 முதல் 11.10.2023 வரை மூன்று நாட்கள் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தமிழக சமூகப் பணிமையத்தின் மூன்று பணியாளர்கள், CRS நிறுவனத்தின் மூன்று பணியாளர்கள், நான்கு மறைமாவட்ட இயக்குநர்கள், திட்ட பணியாளர்கள் என 38 நபர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் ஒரு வருடத்தில் செயல்படுத்தப்பட்ட நலத்திட்டங்கள் குறித்து மறைமாவட்ட வாரியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

13.09.2023 முதல் 15.09.2023 வரை விண்ணைத்தொடு குழந்தைகள் நலத்திட்டத்தின் ஆலோசனை கூட்டமானது மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. கூட்டத்தில் இத்திட்டத்தின் வழியாக பயனாளிகள் அடைந்த நன்மைகள் குறித்து ஆராயப்பட்டது. 13.09.2023 அன்று அருட்தந்தை நெல்சன் அவர்கள் உளநலன் திறன்வளர் பயிற்சி குறித்த கருத்தரங்கு நடத்தினார்கள். இந்த கூட்டம் மற்றும் கருத்தரங்கில் நான்கு மறைமாவட்டங்களில் உள்ள 32 பணியாளர்கள் கலந்து கொண்டனர்.





## மிட்ஸ் விருட்சம் என்ற நுண்கடன்



விருட்சம் நுண்கடன் திட்டம் வழியாக ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரங்கள் உயர்ந்திட மிட்ஸ் நிறுவனம் மூலம் கீழ் குறிப்பிட்டுள்ள மண்டலங்களுக்கு கடன்தொகை வழங்கப்பட்டது. கடன்தொகை வழங்கப்பட்ட மொத்த குழுக்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| வ.எண் | மண்டலம் | விருட்சம் கடன் பெற்ற குழுக்கள் | மொத்த பயனாளிகள் | மொத்த தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1 | களியக்காவிளை | 13 | 52 | 26,00,000/- |
| 2 | மார்த்தாண்டம் | 14 | 56 | 28,00,000/- |
| 3 | நாகர்கோவில் | 11 | 44 | 22,00,000/- |
| 4 | மதுரை | 07 | 114 | 11,40,000/- |
| **மொத்தம்** | | **45** | **266** | **8,74,000/-** |









# தளிர்கள் உலக திட்டம்



மிட்ஸ் தளிர்கள் உலக திட்டம் வாயிலாக பயின்று வரும் பயனாளிகளின் குழந்தைகள் தினவிழா நிகழ்வானது 11-11-2023 அன்று காலை 10.00 மணிக்கு பொதுக்கூட்டத்துடன் ஆரம்பமானது. திரு.சேவியர் தாஸ், மலங்கரை ஸ்கூல் ஆப் காமேஸ் இயக்குநர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார். மிட்ஸ் இயக்குநர் தந்தை ஜாண்குமார் அடிகளார், திட்ட அலுவலர் திரு.ஷாஜன் ஜோசப் அவர்கள், தளிர்கள் உலக திட்ட ஒருங்கிணைப்பாளர் திருமதி வினிதா ராணி ஆகியோர் கலந்து கொண்டனர். தளிர்கள் உலக குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. சுமார் 427 குழந்தைகள் மற்றும் தாய்மார்கள் பங்கு கொண்டனர். 2022-2023 ஆம் கல்வியாண்டில் 12ம் வகுப்பில் மிட்ஸில் 90% மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு கேடயம் வழங்கப்பட்டது. மிட்ஸ் அறிவு திறன் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற குழந்தைகளுக்கு ரூபாய் 300/- மற்றும் ஊக்கப்பரிசும் வழங்கப்பட்டது. குழந்தைகள் தினவிழாவை முன்னிட்டு விளையாட்டு மற்றும் கலைப்போட்டிகள் நடத்தப்பட்டது. அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

## தளிர்கள் உலகம் - பயனாளிகள் சந்திப்பு



மிட்ஸ் தளிர்கள் உலகம் திட்டத்தில் பயன்பெற்றுவரும் பயனாளிகளை சந்திப்பதற்காக 14.10.2023 அன்று ஜெர்மெனி நாட்டை சார்ந்த திருமதி. சூசன்னா லிம்பா அவர்கள் மிட்ஸ் அலுவலகத்திற்கு வருகை தந்திருந்தார்கள். அவர்கள் வழியாக கல்வி உதவித்தொகை பெற்று வரும் 26 மாணவ மாணவிகளையும் அவர்களது பெற்றோர்களையும் தனித்தனியாக நேரில் சந்தித்து உரையாடினார்கள். பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் மாணவமாணவிகளை வாழ்த்தி அவர்களுக்கு பரிசுகள் வழங்கி மகிழ்வித்தார்கள். தொடர்ந்து சிறுதொழில் உதவித்தொகை வழங்கப்பட்ட பயனாளிகளின் இல்லங்களையும், சுய உதவிகுழுக்களையும், அழகுக்கலை மற்றும் ஆரி தையல் கலைப்பயிற்சி பெறும் பெண்களையும் சந்தித்து உரையாடி அவர்களை ஊக்குவித்தார்கள்.

மிட்ஸ் தளிர்கள் உலக திட்ட பயனாளிகளின் கிறிஸ்மஸ் தின விழாவானது 2-12-2023 அன்று மிட்ஸ் கலை அரங்கில் வைத்து காலை 10.00 மணிக்கு ஆரம்பமானது. மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வர் Msgr. ஜோஸ்பிரைட் அடிகளார் அவர்கள் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராக வருகை தந்த திரு. லீ பென்னட் அவர்களின் பேத்தி செல்வி. நீவ் பென்னட் ஆகியோர் கலந்து கொண்டனர். தளிர்கள் உலக திட்ட பயனாளி செல்வன். ஆகாஷ் கிறிஸ்மஸ் வாழ்த்துரை வழங்கினார். கிறிஸ்துமஸ் தினவிழாவை முன்னிட்டு 297 பயனாளிகளுக்கு ரூ.1000/-வீதம் காசோலையானது கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டது. மிட்ஸ் குழந்தைகள் தினவிழாவில் நடைபெற்ற கலை மற்றும் விளையாட்டு போட்டிகளில் வெற்றிபெற்ற பயனாளிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. தளிர்கள் உலக மாதாந்திர கூட்டத்தில் ஒழுங்காக வருகைப் புரிந்த குழந்தைகளுக்கு ஊக்கப்பரிசும் வழங்கப்பட்டது.










## நலத்திட்ட உதவிகள்

06.11.2023 அன்று நாகர்கோவில் பணிமண்டலத்திற்குட்பட்ட மிட்ஸ் சுய உதவி குழுக்களில் உள்ள 46 உறுப்பினர்களுக்கு நபருக்கு 10 வான்கோழிகள் வீதம் 460 வான்கோழிகள் குறைந்த விலைக்கு வழங்கப்பட்டன.

# மரியன் இயக்கத் திட்டம்

மரியன் இயக்கத் திட்ட பயனாளிகள் கூடுகை கூட்டமானது 4-12-2023 அன்று பாலவிளை கிளஸ்டர் சார்பாக புன்னமூட்டுக்கடை சமூகநலக் கூடங்களில் வைத்து மாலை 4 மணியளவில் மரியன் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் Sr. அகதா அவர்கள் தலைமையில் செபத்துடன் ஆரம்பமானது. திருமதி. பத்மினி அவர்கள் அறிக்கை வாசித்தார். Sr. அகதா அவர்கள் கிறிஸ்து பிறப்பின் முக்கியத்துவம் என்னவென்றும் பிறக்க போகும் குழந்தை யேசுவை நம் குடும்பங்களிலும் நம் வாழ்க்கையிலும் வரவேற்று அன்பிலும் அமைதியிலும் ஒருவருக்கொருவர் முன்மாதிரிகையாக வாழவேண்டும் என்ற கருத்தினை பகிர்ந்தார். அனைவரும் மாறி மாறி கிறிஸ்மஸ் வாழ்த்துச்செய்தி பகிர்ந்தார்கள். 16 பயனாளிகள் கலந்துகொண்டார்கள்.



## MIDS Member Welfare Scheme (MMWS)

| வ. எண் | இறந்த உறுப்பினர் பெயர் | நாமினி பெயர் | குழு/ கோள்பிங் பெயர் | வழங்கப்பட்ட தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| 1. | திருமதி. அம்பிளி | திரு. பாஸ்கரன் | பாலவிளை II கோள்பிங் | 10,000/- |
| 2. | திருமதி. சித்திரா | திரு. ஷாம் | மிட்ஸ் தெறம்புதட்டுவிளை | 10,000/- |
| 3. | திருமதி. ராஜம்மாள் | திருமதி. விஜயராணி | மிட்ஸ் நாதம் | 10,000/- |
| 4. | திருமதி. நிர்மலா | திரு. டென்னிஸ் | தாணிவிளை | 10,000/- |
| 5. | திருமதி. ஷோபனா | திருமதி. சஜிதா | மிட்ஸ் கடுவாக்குழி SHG | 10,000/- |
| 6. | திருமதி. சுமா | திரு. பிரான்சிஸ் | ஜாஸ்மின் வாலத்துவிளை SHG | 10,000/- |
| **மொத்த தொகை** | | | | **60,000/-** |





## பிறநிகழ்வுகள்

12.10.2023 முதல் 14.10.2023 வரை கேரள மாநிலம், பாலாவில் வைத்து காரித்தாஸ் இந்தியா சார்பாக நடத்தப்பட்ட மறைமாவட்ட சமூகப்பணி இயக்குநர்களின் தேசியபேரவை கூட்டத்தில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் கலந்து கொண்டார்கள்.



# கைமாறு கருதாத உதவி

மிட்ஸ் தளிர்கள் உலக திட்ட செயல்பாடுகளை பார்வையிட ஆஸ்திரேலியா நாட்டின் உதவியாளர் திரு. லீ பென்னட் அவருடைய பேத்தி செல்வி. நீவ் பென்னட் அவர்கள் உதவி செய்யும் தளிர்கள் உலக திட்ட பயனாளியை நேரில் சந்திக்கும் விதமாக வருகை தந்து பயனாளியை சந்தித்தார்கள். இவர்கள் 5 குடும்பங்களுக்கு உதவி செய்து வருகிறார்கள். மேலும் அவர்கள் மிட்ஸ் செயல்பாடுகளை பார்வையிட்ட போது, நலிவுற்ற குடும்பங்களின் தேவைகளை கண்டுணர்ந்து CTWWC திட்ட பயனாளிகளுள் 50 குழந்தைகளுக்கு 10 கோழிக்குஞ்சுகள் வீதம் 500 கோழிக்குஞ்சுகள் வழங்கினார்கள். மேலும் மிட்ஸ் நிறுவனத்தின் பல்வேறு செயல் திட்டங்களை பார்வையிட்டு உற்சாகத்துடன் மகிழ்ந்தார்கள்.












## அறிந்து கொள்வோம்

1. பைசா நகர சாய்கோபுரத்தில் உள்ள படிகளின் எண்ணிக்கை **- 294**
2. சிவப்பு ரத்த செல்களின் தோராய வாழ்க்கைக் காலம் **100 - 120 நாட்கள்**
3. உலகில் அதிகமாக புத்தகம் படிக்கும் பழக்கம் உள்ளவர்கள் **ஐஸ்லாந்து** நாட்டினர்தான்
4. லத்தீன் மொழியில் மொத்தம் **21** எழுத்துக்கள் தான் உள்ளன
5. குடியரசு தினத்தன்று அளிக்கப்படு பவற்றில் உயர்ந்த விருது **பாரத ரத்னா விருது**
6. கண்டங்களின் பெயர்களின் முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் ஒன்று தான் (ஆங்கிலத்தில் எழுதி பாருங்கள்)
7. தேன்கூட்டில் சேகரித்து வைக்கப்பட்ட தண்ணீரற்ற தேன் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் கெடாது.
8. அதிக இரைச்சல் இதய நோயையும், மனநோயையும் அதிகப்படுத்தும். மரங்கள் இரைச்சலைக் குறைக்கும்.
9. பாம்புகளும் மீன்களும் கண்களைத் திறந்துக் கொண்டுதான் தூங்கும், ஏனெனில் இவற்றுக்கு இமை கிடையாது.
10. நடப்பதை பழக்கமாக வைத்திருப்பவர்களுக்கு தன்னம்பிக்கை, ஆற்றல் ஏன் ஆயுள் கூட அதிகரிக்குமாம். எடையை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் மன அழுத்தத்தை குறைக்கவும் நடைப்பயிற்சியே நல்ல மருந்து.

Cell : 94432 75758
94863 62758

# புஸ்பா டிரேடர்ஸ்

பரவக்காட்டுவிளை, வெட்டுக்குழி, வீயன்னூர் அஞ்சல் 629 177
கன்னியாகுமரி மாவட்டம், தமிழ்நாடு.

**எங்களிடம் கட்டுமானத்திற்குத் தேவையான சதுர மற்றும் உருண்டைப் பைப்புகள், விதவிதமான கூரைத்தகடுகள், கேட், ஜன்னல்களுக்கு தேவையான இரும்பு சாதனங்கள், எல்லாவிதமான கம்பி வலைகள் மற்றும் வேளாண்மை உபகரணங்கள் அனைத்தும் நியாயமான விலையில் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**











நாஞ்சில் ஆப்செட், நாகர்கோவில். © (04652) 233853, 402373